Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

தினக்கதிர்

உங்களின் சகல விதமான
அச்சுத்தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

230, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

☎24821

ஒளி - 01 - கதிர் - 210 10-11-2000 வெள்ளிக்கிழமை பக்கங்கள் - 08 விலை - ரூபா 5/-








(படப்பிடிப்பு: ஜெயா)

# நிமலனின் பூதவுடல் மட்டு நகர் கொண்டுவரப்பட்டது! பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் அஞ்சலி!

(அரியம், வாழைச்சேனை நிருபர்கள்)

இனந்தெரியாத நபர்களினால் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தர நாயகத்தின் பூதவுடல் நேற்று பிற்பகல் 12 மணிக்கு மட்டு நகரில் இருந்து 40 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள வாழைச்சேனை யிலுள்ள அவரது வீட்டிலிருந்து அஞ்சலிக்காக கொண்டுவ ரப்பட்டது.

வாழைச்சேனையில் இரு ந்து பிரதான வீதியூடாக பூதவுடல் தாங்கிய பேழை வைக்கப்பட்ட வாகன அணி வந்த போது கிராம ங்களில் குழுமியிருந்த பொது மக்கள் கதறி அழுது கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். மறைந்த மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தர நாயகத்தின் பூதவுடல் நேற்று பகல் 12 மணிக்கு வாழைச்சேனையில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்து வரப்பட்ட போது அங்கு குழுமியிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் கண்ணீர் விட்டு கதறி அழுதனர்.

பூதவுடல் தாங்கிய வாகனத்துக்கு முன்பு ஒலி பெருக்கி பொருத்திய ஆட்டோ வாகனமும் மோட்டார் சைக்கிளில் பல இளைஞர்களும் அணியாக முன்னே சென்றனர்.

வாழைச்சேனை, களுவங்கேணி, கிரான், சந்திவெளி, சித்தாண்டி, வந்தாறுமூலை, கொம்மாதுறை பகுதியில் ஒலி பெருக்கியில் சோக கீதங்கள் ஒலித்த வண்ணம் இருந்தன ஆங்காங்கே குழுமியிருந்த பலாயிரக்கணக்கான

(8ம் பக்கம் பார்க்க)

# மலையகத் தமிழர் உயிர், உடமை இழப்புகளுக்கு அரசே பொறுப்பு

## அவசரகால சட்ட விவாதத்தில் சதாசிவம்

(கொழும்பு)

**மலையகத்தில் அண்மையில் இடம் பெற்ற வன்முறை சம்பவங்களின் போது தலவாக் கலையில் 27 தமிழர்களின் கடைகளும் ஹினிகத்தேனையில் 11 கடைகளும் எரிக்கப்பட்டுள்ளன பல தமிழர்கள் துப்பாக்கி சூட்டுக்கு பலியாகியுள்ளனர்மலையக மாதுகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவை எல்லாவற் றிற்கும் காரணம் பொலிஸார் தான் என சதாசிவம் எம்.பி. தெரிவித்துள்ளார்.**

மலையக மக்களின் உயிர்களுக்கும் உடமைக ளுக்கும் ஏற்பட்ட இழப்புக ளுக்கும் அரசாங்கமே காரணமாகும் என நுவரெலிய மாவட்ட ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ் சதாசிவம் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்பித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக் கையில் பண்டாரவளையில் இடம் பெற்ற படுகொலை சம்பவத் திற்கு எதிர்ப்பு தெரிவித்து மலையகத்தில் நடாத்திய போராட்டத்தின் போது பல மலையக மக்களின் உயிர்களும் பலியெடுக்கப்பட்டுள்ளது

எமது மக்களின் உயிரை வாட்டி வதைக்கும் அவசரகால சட்டத்தை ஆதரித்து வாக்களிக்க முடியாது.

ஹொட்டகலை ரொனி ஸ்பீல்டர் தோட்டத்தை சேர்ந்த ஒரு இளைஞர் தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் கைது செய்யப்பட்டு பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். தலவாக்கலையில் 27தமிழர்களின் கடைகள் எரிக்கப்பட்டுள்ளன. ஹினிகத்தே னையில் 11 கடைகள் எரிக்கப்பட்டன பலர் பலியடுக்கப் பட்டுள்ளனர்.

511பேர்அகதிகளாகியுள்ளனர் வயோதிபர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

மலையக மாதுக்கள் மீது பாலியல் வல்லுறவு மேற்கொள்ள ப்பட்டுள்ளது நான்கு இளைஞர்கள் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு பலியாகி உள்ளனர். இதற்கு பொலிஸாரே காரணமாகும்.

பம்பரக்கலை தோட்டத்தில் பல வீடுகள் சூறையாடப் பட்டுள்ளது இவையெல்லாம் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் ஆகும் எனத் தெரிவித்தார்.

மலையக மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் ஏற்பட்ட இழப்புகளுக்கு அரசாங்கமே பொறுபேற்க வேண்டும்அவர்களுக்கு நீதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## நால்வர் புதிய எம்.பிக்களாக சத்தியப்பிரமாணம்

(கொழும்பு நிருபர்)

நால்வர் நேற்று புதிய எம்பிக்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். வடமேல் மாகாண முதலமைச்சராக எஸ்.பி நாவின்ன பதவி ஏற்றதைத் தொடர்ந்து ரி.வி. ஏக்க நாயக்காவும், ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஈ.எம்.யூ பொன்னாந்து இராஜினாமா செய்த இடத்திற்க எஸ். தவராஜாவும் மேல்மாகாண முதலமைச்சராக ரெஜினோல்ட் குரே பதவி ஏற்றதைத் தொடர்ந்து பந்துல விக்கிரமசிங்க பாராளுமன்ற பிரதிநிதியாகவும் தெரிவு செய்யப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

## புலிகளுடன் பேசி தீர்வு காணப்படவேண்டும்

(நமது நிருபர்)

நோர்வே அரசு விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகள் முன்கொண்டு செல்லப்பட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜகுகனேஸ்வரன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் பிந்துனுவெவ படுகொலை சம்பந்தமான பூரண விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அரசாங்கமே இதற்கு முழுப் பொறுப்பு எனக் கூறாவிடினும் நியாயமான விசாரணை நடாத்த வேண்டிய பொறுப்பு அரசிற்க உண்டு.

வடபகுதியில் மருந்து உணவு பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை களைவதற்கு அரசு முன்வரவேண்டும். யாழ் மீனவர்கள் தொழில் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர். இவர்களுக்கு எதுவித நிவாரணங்களும் வழங்கப்பட வில்லை. இவற்றை வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

## ஈ.பி.ஆர் எல்எவ் அலுவலகம் மீது புலிகள் தாக்குதல்

(ஏறாவூர்நிருபர்)

வாழைச்சேனை ஈ.பி.ஆர். எல்.எவ். அலுவலகம் மீது விடுதலைப் புலிகள் புதன் இரவு தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதல் பொலிஸா ரினால் முறியடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## பத்திரிகையாளர் சிவபாதசுந்தரம் காலமானார்

(நமது நிருபர்)

பிரபல பத்திரிகையாளர் சோ.சிவபாத சுந்தரம் தனது 88 வது வயதில் நேற்று லண்டனில் காலமானார்.

இவர் ஈழ கேசரிப்பத்திரி

(8ம் பக்கம் பார்க்க)

## அவசரகால சட்டம் மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பு

(கொழும்பு)

அவசரகால சட்டம் மேலும் ஒரு மாதக்காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று பாராளுமன் றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

பிரேரணையை ஆதரித்து 113 வாக்குகளும் எதிராக 15 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஐ.தே.கட்சி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, மக்கள் விடுதலை முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், சிஹல உறுமய ஆகிய கட்சிப் பிரதிநிதிகள் எதிர்த்து வாக்களித் தன

# தினக்கதிர்

த.பெ. இல: '06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055


## சந்திரிக்காவின் கொள்கைப் பிரகடனம்

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தான் தீர்வு. விடுதலைப்புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்வதானால் அரசியல் அம்சங்கள் குறித்துப் பேசுவதற்கு அவர்களுக்கு அரசின் கதவுகள் திறந்தேயிருக்கும்.**

**பேச்சுவார்த்தைக்கு புலிகள் சில நிபந்தனைகள் விதித்திருக்கிறார்கள். இந்த நிபந்தனைகள் பற்றி தெரிந்ததும் சகல அரசியல் கட்சிகளுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்படும்.**

**போரின் மூலம் புலிகளுக்குப் பதில் கொடுக்கும் திட்டம் கைவிடப்படமாட்டாது**

**இலங்கையின் 11வது பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து இலங்கையின் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக குமாரதுங்க நிகழ்த்திய புதிய அரசின் கொள்கைப் பிரகடன உரையில் தெரிவிக்கப்பட்ட அம்சங்களில் சிலவே மேலே காணப்படுபவை**

**நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தர அமைதித் தீர்வு காணும் முயற்சியில் போர் நிறுத்தம் ஒன்று ஏற்பட்டு நாடு சிறிதளவாவவது நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கான சமிக்ஞையை ஜனாதிபதியின் கொள்கைப்பிரகடனத்தில் எதிர்பார்த்திருந்த நாட்டு மக்களுக்கு ஜனாதிபதியின் உரை ஏமாற்றத்தையே அளித்திருக்கிறது.**

**போரை நிறுத்தி நோர்வேயின் அமைதிக்கான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான யோசனைகளை ஜனாதிபதி கோடிட்டுக் காட்டுவாரென்று மக்கள் எதிர்பார்த்திருந்தனர்.**

**ஆனால் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் நடந்தாலும் போரும் தொடருமென்றே சந்திரிக்கா கூறியிருக்கிறார்.**

**தேர்தல் பிரசாரத்தின் போது சந்திரிகாவும் பிரதமர் ரத்தினசிறி விக்கிரமநாயக்காவும் போரில் விடுதலைப்புலிகளை அழித்து ஒழித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்று கூறிவந்ததை வெறும் தேர்தல் பிரசாரமல்லாது பேரினவாதிகளும் பேரினவாதப்பத்திரிகைகளும் சுட்டிக்காட்டி வந்ததை சந்திரிக்கா ஏற்றுக் கொண்டுசெயல் படுத்த முனைந்திருப்பதையும் இது காட்டுகிறது.**

**விடுதலைப்புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்பது ஆட்சி அதிகாரத்திற்கு வருபவர்கள் எல்லோரும் சொல்லும் வாய்ப்பாடுதான்.**

**1947ம் ஆண்டில் நடந்த முதல் பாராளுமன்றத்துக்கான தேர்தலிலிருந்து 1977ம் ஆண்டு வரை இலங்கைப் பாராளுமன்றத்துக்கு நடந்த் தேர்தல் வரை அத்தனை தேர்தல்களிலும் தமிழ்மக்கள் கலந்து கொண்டு இலங்கைப்பாராளுமன்றத்துக்குத் தங்கள் பிரதிநிதிகளை ஜனநாயக முறையில் தேர்ந்தெடுத்து அனுப்பி வந்தனர்.**

**இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பில் இலங்கைப் பாராளுமன்றத்துக்கு தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்குகிழக்குப் பிரதேசத்திலிருந்து தமிழ்ப்பேசும் மக்களின் பிரதிநிதிகளாகத் தமிழ்ப் பேசும் மக்களால் தெரிவு செய்து அனுப்பப்பட்டவர்களால் என்ன செய்யமுடிந்தது.**

**ஒரு சிலருக்கு வேலை வாய்ப்பும் இடமாற்றமும் பதவி உயர்வும் வீதிகள் அமைக்கவும் பாடசாலைகளுக்கு சில கட்டடிடங்கள் அமைக்கவும் போன்ற சில சலுகைகளைத் தவிர அவர்களால் என்ன செய்யமுடிந்தது. வடக்கு கிழக்கிலிருந்து 1956ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டுச் சென்ற பிரதிநிதிகள் அத்தனை பேரும் ஒரேகுரலில் எதிர்த்து நின்ற போதும் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதைத் தடுக்க முடிந்ததா? அல்லது அதில் சிறுதிருத்தத்தைத்தானும் கொண்டு வரமுடிந்ததா?**

**இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு செய்து கொள்ளப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தத்தை செயல்படுத்த வேண்டுமென்று விடாப்பிடியாக நிற்கமுடிந்ததா?**

**தமிழ் மக்களின் உயர்கல்வியையும் உத்தியோகவாய்ப்பையும் தடுக்கும் தரப்படுத்தலைத் தடுக்க தமிழ் பிரதிநிதிகளால் முடிந்ததா?**

**1970 ம் ஆண்டில் இலங்கையை ஒரு குடியரசு நாடாக பிரகடனப்புடுத்தும் புதிய அரசியல் யாப்பைத் தயாரிக்கும் போது இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணக்கூடிய வகையில் திருத்தங்கள் கொண்டுவந்து புதிய அரசியல் யாப்பைக் கொண்டு வர முடிந்ததா?**

**தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்மக்களின் மண்ணை அபகரிக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க முடிந்ததா?**

**இவ்வளவும் ஏன் ; இப்போது அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கும் தமிழ்ப்பிரதிநிதிகள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்டு என்னத்தைச் சாதித்திருக்கிறார்கள்.**

**பண்டாரவளைப் படுகொலைகளுக்குப் பின்னராவது அதற்கு காரணமாகவும் இன்றும் தமிழ்இளைஞர்கள் காரணமின்றி கைது செய்யப்பட்டும் சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதற்கும் கொலை செய்யப்படுவதற்கும் காரணமாக இருக்கும் அவசரகாலச் சட்டத்தை இல்லாமல் செய்ய முடியுமா? அல்லது இச்சட்டங்களில் திருத்தம் கூடச் செய்யமுடியுமா?**

**இலங்கையின் இன்றைய அரசியலமைப்பின் படி ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து அரசுக்கு அதன் செயல்களுக்கு கை உயர்த்திக் கொண்டு சலுகைகளைத்தான் பெற முடியும். இல்லையேல் எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து எதிர்த்துக்கையுயர்த்தி அடுத்த தேர்தலின் பின் அவர்கள் ஆளும் கட்சியாக வந்தால் அவர்களை ஆதரித்துக் கை உயர்த்தலாம்.**

**வேறு என்ன இந்த பெரும்பான்மை ஜனநாயகத்தில் செய்ய முடியும்? சொன்னதையே சொல்லிக் கொண்டு பெரும்பான்மைக் கட்சிகள் தங்கள் அதிகாரத்தைச் செயல்படுத்திக் கொண்டிருப்பார்கள்? தமிழ் இனம் அழிந்து கொண்டு போக வேண்டியது தானா?**

**சந்திரிக்காவின் புதிய அரசாங்கத்தின் கொள்கைப்பிரகடனம் வெளிநாட்டுஉதவிகள் தடைபடாமல் நோர்வேயின் மூன்றாம் தரப்ப மத்தியஸ்த்தை வரவேற்று அமைதிக்கு ஒத்துழைப்பதாகக் காட்டிக் கொள்ளும். அதே சமயம் பேரின வாதிகளையும் திருப்தி செய்வதாகவே அமைந்துள்ளது. தமிழ் மக்களின் இன்னல் நீங்குவதற்கு எந்த அறிகுறியும் இல்லை!**

# உள்நாட்டு விவகாரம் என்ற அடிப்படையில் சொந்தமக்களைப் படு கொலை செய்ய முடியாது

**கொசோவோ நெருக்கடி, மனிதநேயத் தலையீட்டுக்கான உரிமையை ஆதரிப்பவர்களுக்கும் எதிர்ப்பவர்களுக்கும் இடையே விவாதத்தைத் தூண்டிவிட்டிருந்தது. பின்வரும் கட்டுரை. 1999 ஜூனுக்கு முன்பு எழுதப்பட்டது.**

உரிமை, கடமைக் குறுக்கீடு என்ற சொற்களுடன் மனிதாபிமானம் என்கிற சொல்லும் உடனடியாகச் சேர்ந்து கொள்ளப்படுகிறது. 1980 ஆம் ஆண்டின் இறுதியில் இதை உருவாக்கியவர்கள் பாரிஸ்-11 பல்கலைக்கழகத்தின் பன்னாட்டுப் பொதுச் சட்டப் பேராசிரியர் மரியோ பெட்டாட்டி மற்றும் .பிரெஞ்சு அரசியல்வாதி பெர்னார்டு கௌச்னர். எல்லைகள் இல்லாத மருத்துவர்கள் என்ற அமைப்பை உருவாக்கியவர்களில் கௌச்னர் ஒருவர். இனப்படுகொலை தொடர்பான விமர்சனங்கள்ளத் தவிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அரசு இறையாண்மை என்ற பழைய கோட்பாட்டைக் கேள்விக்கு உள்ளாக்குகிறோம் என்கிறார் கௌச்னர். மக்களாட்சி, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமை மீது மரியாதை போன்ற புதிய விழுமியங்கள் உயர் முன்னுரிமை பெற்றிருந்த சூழலில், இக்கருத்து வேகமாகப் பரவியது. துயரத்தில் இருப்போருக்கு உதவுவது அவசியம். ஏதாவது அபாயத்தில் இருப்போருக்கு உதவுவது அனைவரின் கடமை. வழக்கமான சட்ட விதிகளை இது பொருட்படுத்தாது.

இதை ஓங்கி ஒலித்தவர்களின் தாராள சிந்தனை ஒரு புறமும் இருந்தாலும், அவர்களின் நிலைப்பாட்டை எதிர்த்துக் கேள்விகளும் விமர்சனங்களும் கூட உடனடியாக எழுந்தன. இது வெறும் தார்மீக உரிமையா அல்லது பன்னாட்டுச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய கோட்பாடா? இறையாண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் பலநூறு ஆண்டுகளாகப் பன்னாட்டுச் சட்ட முறையில் மட்டுமே அது கட்டுப்படும். குறிப்பாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதில், ஓர் உடன்பாடு அல்லது ஏற்கனவே நடைமுறையிலுள்ள வழக்கமான சட்டத்தை ஒரு நாடு அங்கீகரித்தால் மட்டுமே, அவற்றுக்கு அது கட்டுப்பட வேண்டிய கடமை உள்ளது எனக் கருதப்படுகிறது. மனித உரிமை என்பது உலகெங்கும் பல்வேறு நிலைகளில் உள்ளது. சில நாடுகளில் உள்ளவர்களுக்கு மற்ற நாடுகளை விட அதிகம் பாதுகாப்பு இருக்கிறது.

நடுவர் மன்றம் ஒன்றின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளாத நாடு மீது மனித உரிமை மீறலுக்காக வழக்குப் போட முடியாது. இதுதான் இறையான்மைக்கு பொருள். ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் போன்ற வட்டார அமைப்புக்கள் வழியாக அல்லாமல், மனித உரிமை மீறலுக்காக ஒரு நாட்டை புன்னாட்டு நீதிமன்றம் தண்டிப்பது கடினம். தண்டனை வழங்கப்பட்டால் கூட, அதை செயல்படுத்துவதற்கு வழியில்லை.

குறுக்கீட்டு உரிமை என்பது இறையாண்மைக் கோட்பாட்டு மீது அமைந்த இச் சட்ட பூர்வ அமைப்பைக் கேள்விக்கு உட்படுத்துவதாகும். அரசு அதிகாரம் என்பது மிக அவசரத் தேவைகளுக்கு இணங்கியதாக இருக்க வேண்டும். குறைந்தபட்ச மனித உரிமைப் பாதுகாப்பு அவசியம் என்பது குறுக்கீட்டுக் கோட்பாட்டின் அடிப்படை.

எனவே எல்லைகளைப் பற்றிக் கவலைப்படாமல் மனிதாபிமான உதவிகள் அளிக்கப் பட வேண்டும். ஒரு சட்டத்தை மதிக்க ஒரு நாடு ஒப்புக் கொண்டுள்ளதா? ஒரு நீதிமன்றத்தை அல்லது பன்னாட்டுக்காவல் படையின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டுள்ளதா என்றெல்லாம் பார்க்கத் தேவையில்லை. சட்ட முறை சடங்குகளுக்கு பணிந்து செல்ல வேண்டும். என்பது இனியும் செல்லுபடியாகாது. இதுவும் ஒரு நாடு தன் சொந்த மக்களை இனப் படுகொலை செய்வது கேவலமானது என்றாலும் அனுமதிக்கத் தக்கது என ஏற்றுக் கொள்வதைப் போன்றதாகும் என்பது கௌச்னர்கருத்து.

**எந்தச் சூழ்நிலையிலும், ஓர் அரசு தன் நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் யாவும் ''உள்நாட்டு விவகாரம்'' எனக் காரணங்கூறி, தன் சொந்த மக்களைக் கொன்று குவிப்பது ''சட்டபூர்வமானது'' என்று கூற முடியாது.**

பாரம்பரியப் பன்னாட்டுச் சட்டம் குறித்து, குறுக்கீட்டு உரிமை ஆதரவாளர்கள் கொண்டுள்ள கருத்தை பல சட்ட வல்லுனர்கள் கடுமையாகக் குறை கூறுகிறார்கள். முதலாவது, ஒரு நாட்டுக்குள் நடக்கும் எதுவானாலும் அது உள்நாட்டு விவகாரம் என்ற அடிப்படையில் தனது சொந்த மக்களைப் படுகொலை செய்வது சட்ட பூர்வமானதே என எந்த நாடும் எந்தச் சூழ்நிலையிலும் கூற முடியாது. வாழ்வுரிமை போன்ற அடிப்படை உரிமைகளை மதிக்க அனைத்து நாட்களும் ஒப்புக் கொண்டுள்ளன. சொந்த மக்களை சொந்த மண்ணில் படுகொலை செய்வது சட்ட விரோதமானது. இந்தக் கோட்பாடுகளை மதிக்க இறையாண்மை அடிப்படையில் அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அதன் படி அது நடந்து கொள்ள வேண்டும்.

சட்ட மீறல் பெரிய அளவில் நடைபெறும் போது அரசியல், ராஜதந்திர, பொருளாதார, நிதி, முறைகளில் எதிர் வினைகள் ஏற்படலாம். மக்களின் மிக அடிப்படையான உரிமைகள் மீறப்படும் போது, ஐக்கிய நாடுகள் மன்றத்தின் தலையீடு இல்லாமலேயே, ஒரு நாடு மீது தடைகள் விதிக்கப்படலாம். இத்தகைய நடவடிக்கை பால்க்லாந்து போரின் போது ஆர்ஜென்டினா மீதும், ஆப்கனில் இராணுவத்தலையீட்டை அடுத்து சோவியத் யூனியன் மீதும், அதிரடிப் புரட்சிகள் மூலம் ஆட்சிமாற்றம் நடைபெற்ற ஹைய்தி, புருண்டி உள்ளிட்ட நாடகள் மீதும் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பேரளவு மீறப்படுவது பன்னாட்டு அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தானது என்று அறிவித்து, இராணுவத் தலையீட்டுக்கு ஐநா.பாதுகாப்பு மன்றம் அதிகாரம் அளிக்கலாம். இதைப் பலமுறை ஆராய்ந்தால் ஏற்கெனவே உள்ள சட்ட முறைமைகள் அடிப்படையிலேயே மனித உரிமை தொடர்பான பெரும்பாலான தலையீடுகள் நடந்துள்ளன என்பது விளங்கும். மனித உரிமைகளைத் திறம்படப் பாதுகாப்பதற்கு பழைய சட்டங்கள் போதுமானவையல்ல என்பது தவறு. உண்மை என்னவெனில், சட்டம் தொடர்பானதாக அல்லாமல், அரசியல் சார்ந்ததாகப் பிரச்சினை இருப்பதுதான் . எனவே ஏற்கனவே உள்ள சட்டங்களைத் திறம்பட செயல்படுத்த வேண்டுமே தவிர புதிய சட்டங்கள் தேவையில்லை.

இந்த அரசியல் முட்டுக் கட்டைகள், குறிப்பாக ஐ.நா. பாதுகாப்பு மன்றத்தில் ரத்து அதிகாரத்தைப் பயன் படுத்துவது போன்றவை எதைக் குறிக்கின்றன? மனித உரிமைகளைப் பாதுகாக்கப் பன்னாட்டுச் சட்டங்கள் போதுமான அளவு சிறப்பாக உள்ளதாக எவரும் கூற முடியாது என்பதையே . ஆனால் குறைகள் இருந்தாலும் மனிதாபிமான உரிமைகள் தொடர்பான குறுக்கீட்டைப் பரந்த அளவு சேர்ப்பதைக் காட்டிலும் இந்த ஏற்பாடு சற்றுக் குறைவான தீமையுடையது என்பது பல பகுப்பாய்வாளர்களின் கருத்து.

தலையிடாக் கோட்பாடு என்பது பலவீனமான நாடுகள் புரிந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போர்களின் விளைவேயாகும். [illegible]வது நூற்றாண்டு முழுமையும் அவை காலனி ஆதிக்கத்தையும் சந்திக்க நேர்ந்தன. இதனால் [illegible] விழுமியங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆட்டோமன் பேரரசு மற்றும் ஆப்பிரிக்கா, தூர கிழக்கு நாடுகளில் மேலை நாடுகளின் இராணுவ நடவடிக்கையை நியாயப் படுத்த பல நேரங்களில் மனிதாபிமானவாதம் பயன்படுத்தப் பட்டது.

இத்தகைய வழக்கத்துக்கு ஐ.நா.அறிக்கை முற்றுப்புள்ளி வைக்கவில்லை. ஆனால் தாக்குதலுக்கு உள்ளான நாடுகள், பலாத்காரத்துக்கு எதிரான சட்டத்தைக் கையாள வாய்ப்பு அளித்தது. தலையீட்டுக் கான உரிமை என்ற நிலைக்குத் திரும்புவது ஐ.நா.அறிக்கையைப் புறந்தள்ளி விடக்கூடும். மனித சமுதாயத்திற்கு என்ன தேவை என்பதை உலகின் பலம் பெருந்திய நாடுகளே தீர்மானிக்கும் நிலைமை ஏற்படலாம். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பது மீண்டும் உருவாகலாம்.

இரட்டை அளவுகோல், கேள்வி அடிக்கடி எழுப்பப்படுகிறது அரசியல் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை எப்படி மனிதாபிமானக் கண்ணோட்டம் கொண்டாதகக் கருத முடியும்? அடிப்படை மனித உரிமைகளை மீறக்கூடிய சில நாடுகள் சிக்காமல் தப்பி விடுவதற்கு இதுதான் காரணம் என்று விளக்கம் தரப்படுகிறது. எடுத்துக்காட்டாக பாலஸ்தீன நிலைமை பற்றி அடிக்கடி கூறப்படுவதுண்டு. தலையிடுவதற்கான உரிமையில் ஏற்படக் கூடிய அடிப்படையான பிரச்சினையை இது கூட்டிக் காட்டுகிறது. இந்த உரிமை தெளிவாக வரையறுக்கப்படவில்லை. இறையாண்

(4ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க அதிபர் தேர்தலில் குழறுபடி. அவசரத்தில் உலகத் தலைவர்கள் வாழ்த்து

## புளோரிடா மாநில வாக்குகள் மீண்டும் எண்ணப்படுகின்றன.

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் சமீபகால வரலாற்றிலேயே இல்லாத மாதிரி இம்முறை நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் வாக்குகள் எண்ணப்படு வதிலும் முடிவுகள் வெளியாவதிலும் பெரும் குழறுபடிகள் ஏற்பட்டுள்ளன. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் வெற்றி தோல்வியை முடிவு செய்யும் மாநிலம் என்று கருதப்படும் புளோரிடா மாநிலத்தில் முதலில் எண்ணப்பட்ட வாக்குகளில் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அதிகப் படியான வாக்குகள் கிடைத்ததாக முதலில் அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வெற்றி பெற்று விட்டதாக முதலில் அறிவிக்கப் பட்டது. புளோரிடா மாநில வாக்கு களில் பெரும்பாலான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியானது.

சிறிது நேரத்தில் இது தவறு என்பதும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோ வெற்றி வாய்ப்பை நோக்கி முன்னணி யிலிருப்பதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் இம்மாநில வாக்குகள் திருப்பி எண்ணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ஜோர்ஜ்புஸ் வெற்றிபெற்று விட்டார் என்ற செய்தி கிடைத்ததும் பிரான்ஸ், ரஷ்யா, ஜப்பான், இந்தியா மற்றும் பல உலக நாடுகளின் தலைவர்களும் புஷ்ஷின் வெற்றியைப் பாராட்டியும் வாழ்த்தியும் செய்திகள் அனுப்பி வைத்தனர். புஷ்ஷின் பெருமை களையும் திறமைகளையும் பாராட்டி புஷ்ஷிற்கும் தங்கள் நாடுகளுக்கு முள்ள தொடர்புகள் பற்றியும் குறிப்பிட்டிருந்தனர்.

தேர்தல் முடிவு மாறினாலும் இந்த வாழ்த்துச் செய்திகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது

உலக வலம்

தொகுப்பு :- பெளஸி



நியுயோக் நகரத் தொகுதியில் ஜனநாயகக்கட்சி வேட்பாளராக செனற்சபைக்குப் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டிய ஹிலாறி றொடாம் கிளின்டன் அத்தேர்தலில் வெற்றியீட்டியதன் மூலம் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய முதலாவது ஜனாதிபதியின் மனைவி என்றும் "நாட்டின் முதல் மங்கை" ஈட்டிய வெற்றி என்ற பெருமையையும் பெறுகிறார். தேர்தல் பிரச்சாரத்தின் போது ஆதரவாளர்களின் உற்சாகவரவேற்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் காட்சி இது

# இந்தியாவில் 27வது மாநிலமாக உ.பி.யில் உத்தராஞ்சல் உதயம்!

(லக்மணபுரி)

இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் புதிய மாநிலமொன்று உருவாக்கப் பட்டுள்ளது. இது இந்தியாவின் 27வது மாநிலமாகும்.

உத்தராஞ்சல் என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த மாநிலத்தின் முதலாவது ஆளுநராக எஸ்.எஸ்.பர்னாலா நியமிக்கப் பட்டு நேற்று பதவியேற்றுக் கொண்டார். இவர் 1990-91 ம் ஆண்டுகளில் தமிழ்நாடு மாநில ஆளுநராக பதவிவகித்தவர். 1991ம் ஆண்டு கலைஞர் கருணாநிதி தலைமையில் தமிழ் நாட்டில் இருந்த கட்சியை குடியரசு தலைவராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் கலைத்த போது தமது ஆலோசனை கேட்காமல் கலைத்ததை ஆட்சேபித்து வந்ததனால் தமது பதவியை ராஜினாமாச் செய்து வெளியேறினார்.

புதிய உத்தராஞ்சல் சட்டசபையில் 30 உறுப்பினர் உள்ளனர். ஒரு கோடி மக்களைக் கொண்ட உத்தராஞ்சல் மாநிலத்தின் முதலமைச்சராக நித்தியானந்த சுவாமி பதவியேற்றியிருக்கிறார்.


முதல்வரும் ஆளுநரும் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களென்ற ஆட்சேபம் இருந்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள சீக்கியர்களைச் சமாளிப்பதற்காகவே பர்னாலாவை ஆளுநராக நியமித்திருப்பதாக கருதப்படுகிறது.

# ஆபத்தான நிலையில் முரசொலிமாறன் மருத்துவ மனையில் சிகிச்சை

(சென்னை)

இந்திய மத்திய வர்த்தக அமைச்சரும் தி.மு கழகத்தின் மத்திய குழு உறுப்பினரும், தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியின் மருமகனுமாகிய முரசொலிமாறன் கடுமையாக நோய்வாய்ப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்.

இப்பொழுது செயற்கைச் சுவாசம் பொருத்தப்பட்டுள்ளது. இதை நிரந்தரமாக பொருத்தி விடலாமா என்று ஆலோசிக்கப்பட்ட போதிலும் அதைப் பொருத்துவதற்கான சத்திர சிகிச்சையை அவரது உடல் தாங்குமா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. அமெரிக்காவிற்கு கொண்டு செல்வதற்கு யோசிக்கப்பட்டதாகவும் ஆனால், 22 மணிநேர விமானப் பயணத்தை அவரது உடல் தாங்குமா என்ற சந்தேகமும் ஏற்பட்டிருப்பதால் அந்த



யோசனையும் கைவிடப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

66 வயதான முரசொலி மாறன் கலைஞர் கருணாநிதியுடன் சேர்ந்தே கழகப்பணிகளிலும் கட்சிப் பணியிலும் ஈடுபட்டு வந்தார். இலக்கியத்திலும் சிறந்து விளங்கிய முரசொலிமாறன் சில திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதியிருக்கிறார்.

முரசொலிமாறன் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருப்பது கலைஞர் கருணாநிதிக்கு மிகுந்த கவலையைக் கொடுத்துள்ளது. அடிக்கடி மருத்துவமனைக்குச் சென்று பார்த்து வருவதும் டாக்டர்களுடன் கலந்தாலோசனை செய்வதுமாக முதல்வர் இருக்கிறார்.

வாஜ்பேய் தலைமையில் தேசிய முன்னணி அமைப்பதிலும் தி.மு.கழகம் இதில் முக்கியபங்கு வகிப்பதிலும் முரசொலிமாறனுக்கு நிறையவே பங்கு இருக்கிறது.

# ஈராக்குடனான உறவு பலப்படும்

(பக்தாத்)

ஈராக்குடனான உறவுகள் மீண்டும் பலப்படுத்தப்படும் என ஹெருசிரோவில் அறபிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்; 1991ம் ஆண்டு ஏற்பட்ட வளைகுடா யுத்தத்தின் காரணமாக இவ்விரு நாடுகளுக்குமான வெளிநாட்டு ராஜதந்திர உறவுகள் முறிவடைந்திருந்தன. பக்தாதில் எகிப்திய தூதராலயத்தை நிறுவுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதாக எகிப்திய வெளிவிவகார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்விரு நாடுகளின் அரசியல் உயர் அதிகாரிகளும் பரஸ்பரம் மேற்கொண்ட சமாதான உறவுக்குமான பயணத்தை தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

# பல நாள் கள்ளன் கைது

(டோக்கியோ)

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சர்வதேச சட்ட அமுலாக்கலின் கண்களில் மண்ணைத் தூவி வந்த குற்றவாளி ஒருவர் நேற்று முன்தினம் ஜப்பானில் வைத்து கைதானார். சிஜானக்கோ என்ற பெயருடைய 55 வயதான இந்தப் பெண் இடதுசாரி அமைப்பான ஜப்பானில் சிவப்பு இராணுவத்தின் தலைவராக இருந்துள்ளார்.

லெபனானில் வசித்து வருகின்றார் என கூறப்பட்ட இவர் ஜப்பானில் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து பல கோணங்களிலிருந்து வியப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரு ஆண் போன்று வேடமிட்டு ஹொட்டல் ஒன்றில் அறையெடுத்து தங்கியிருக்கையிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

# பிஜியில் பாதுகாப்பு துரிதம் இஸ்பெயர் நீதிமன்றில் ஆஜர்

பிஜியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்று பலப்படுத்தப்பட்டுள்ளன. சதிப்புரட்சியாளரான ஜோர்ஜ் இஸ்பெய்ட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட இருப்பதே இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம் பிஜியில் சதிப்புரட்சி மூலம் இந்திய வம்சாவளி இனத்தவரான பிரதமர் மகேந்திர சவுத்திரியின் ஆட்சியை கவிழ்த்ததன் காரணமாக ஜோர்ஜ் இஸ்பெய்ட்டின் மீது தேசதுரோக குற்றசாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த திங்கட் கிழமை சதிப்புரட்சியாளர் இஸ்பெய்ட் தலைநகரிலுள்ள நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மேலும் பதட்டம் அதிகரிக்கலாம் என்ற காரணத்தால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

தற்போது இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நுக்குலொ தீவிலுள்ள நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பிஜி படைபிரிவிலுள்ள தீவிரவாதிகள் கடந்த வாரம் மேற்கொண்ட கலவரம் தோல்வியில் முடிவடைந்ததையடுத்து பதட்டம் அதிகரித்துள்ளது. இச்சம்பவத்தில் எட்டுப் பேர் சுட்டுக் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# மூன்று குழந்தைகளின் எலும்புக் கூடுகள் மீட்பு ஆய்வுகள் தொடர்கின்றன

(சிட்னி)

அவுஸ்ரேலியாவின் பழமை வாய்ந்த வீடு ஒன்றிலிருந்து 3 குழந்தைகளின் எலும்புக் கூடுகளை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர். இதனை அடுத்து குறித்த வீட்டின் சகல பகுதிகளிலும் பொலிஸார் தேடுதல்களை மேற்கொண்டனர்.

அவுஸ்ரேலியாவின் தென் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து இவை எடுக்கப்பட்டன.. இந்தக் குழந்தைகள் இறக்கும் போது அவர்களுக்கு வயது என்ன? என்ன காரணத்திற்காக எங்கே எப்படி கொல்லப்பட்டனர் என்பது பற்றி ஆராய உடல் கூறுகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குழந்தைகள் என்ன வயதில் மரணித்துள்ளார்கள் என்பது குறித்து உடன் கூறமுடியாது. என்று தெரிவித்துள்ள அவுஸ்ரேலிய புலனாய்வு அத்தியேட்சகர் அவர்கள் மிக குறைந்த வயதினர் என்பது மட்டும் தெளிவாக தெரிகின்றது என்று கூறியுள்ளார்.

வீட்டின் உரிமையாளர் வீட்டை சுத்தம் செய்யும் போது இந்த எலும்புக் கூடுகளைக் கண்டதும் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

அவுஸ்ரேலியாவில் நிகழ்ந்து வரும் இப்படியான மர்ம கொலைகள் பற்றிய உண்மை நிலைகண்டறியும் வரை கருத்து எதுவும் கூறமுடியாது என்று பொலிஸார் கூறுகின்றனர். இதே வேளை அர்னேயின் கரையோரப் பகுதியில் இருந்து 3 குழந்தைகள் 1996ம் ஆண்டு காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகிறது.

# "மக்களின் இன்னல்கள் துயர்களை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளன"

## நூல்வெளியீட்டில் கருத்து

(வெல்லாவெளி நிருபர்)

சமூக அநீதிக்கெதிரான கூர்வாளாகவும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவும் சமூகத்தை விழிப்புணர்வு அடையச் செய்வதாகவும் "கபாலபதி" நூல் அமைந்துள்ளது என கிழக்கு பல்கலைக் கழக மொழித்துறை விரிவுரையாளர் திருமதி.ரூபி வலன்ரீனா பிரான்ஸிஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற திசேராவின் "கபாலபதி" நூல் வெளியீட்டு உரையில் பேசும் போது அவர் தெரிவித்தார். ஜெயா அன்ரன் சேவியர் தலைமையில் இவ் வைபவம் இடம் பெற்றது.

இக்கதைகளில் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. "நாள்" என்ற பண்பு கூடுதலாக கதைகளில் வெளிப்படுத்தப்படுகிறது. ஜீரணிக்க முடியாத சம்பவங்களை இக் கதைகள் வெளிக்காட்டுகின்றன.

"கபாலபதி" என்பதன் கருத்து மண்டையோடு என்பதாகும். இப்பெயர் காரணப் பெயராக வந்திருக்கலாம்.

சிறுகதைக்குரிய தன்மை இல்லை எனச்சிலர் கூறலாம். இக்கதை சொல்லப்படுகின்ற விதம் புதுப்பாணியில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

கதைகள் உற்று வாசிக்கும் போது கிருஷ்ணஜீவனுடைய கோணேஸ் வரிகளும் ஞாபகத்திற்கு வருகிறார்கள்.

காலா காலமாக நசுக்கப்பட்டு வாழ்வு சீரணிக்கப்பட்ட மக்களாக மலையக மக்களின் வாழ்வை சித்தரிப்பதாக "கோவேரு கழுதை" கதை அமைகின்றது.

"வேட்டைப் பல்" கதையைப் படிக்கும் போது ஒருவன் தனது உடலை போர்வை கொண்டு போர்த்தது காகம் அவனை கொத்துகின்ற தன்மை காட்டப்படுகின்றது. அங்கு அவன் தொடர்ந்து வேதனையை அனுப வித்து பின்பே தனது கைகளை நம்பும் நிலை வெளிப்படுகிறது.

விஷேட தன்மை நகைச் சுவைப் பாவம்,சோகம், சூழல், பிரச்சினை வெளிப்பாடு, தீர்வு, குறியீடு, உருவகப் பயன்பாடு,மொழி நடை ஆகியன சிறப்பாக அமைந்துள்ளன.

சமூகம் பற்றிய அக்கறை, அவதானிப்பு, கதைகளில், வெளிப்படுத்தப்படுகின்றன. தலைப் புக்கள் வித்தியாசமானவையாகக் காணப்படுகின்றது.

சமூக அநீதிகளை வெளிக் கொணரும் ஆசிரியரின் ஆற்றல் வெளிப்படுத்தப்படுகிறது. அத்தோடு ஈழத்தமிழர் வாழ்வின் வரலாறுகளை எடுத்துக் கூறும் சான்றுகளாக அமைந்துள்ளன. என்றார்.

நூல் அறிமுகவுரை நிகழ்த்திய கு.தேசவன் தமதுரையில்... வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதோடு மலையக மக்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லும் பாங்கு காணப்படுகிறது. குறியீடுகள் பாவிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் தனக்கு ஏற்பட்ட இடர்களை எடுத்துச் செல்லும் பாங்கு வெளிப்படுகின்றது என்றார்.

கலாசாலை முதல்வர் வ.தெய்வேந்திரன் முன்னாள் முதல்வர் வ.கனகசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

# உள்நாட்டு ....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மைக்கு மிகவும் கடுமையான, சட்டதிட்டங்கள் நிறைந்த விளக்கம் தரப்படும்போது அதை எதிர்க்கும் நிலையில், தலையிடும் உரிமையைக் குறிப்பிட வேண்டியுள்ளது. அப்போது ஏற்படக்கூடிய தெளிவற்ற தன்மையை மரியோ பெட்டாட்டி குறிப்பிடுகிறார். இறையாண்மை என்ற சொல்லுக்குச் சட்டபூர்வ உள்ளீடு எதுவும் கிடையாது. அதனுடன் மனிதாபிமானம் என்ற உரிச்சொல் சேரும் போதுதான் அப்படிப்பட்ட ஒன்றை அது பெறுகிறது. தலையீட்டுக்கு அந்த உரிச்சொல் அளிக்கும் நோககம் காரணமாக, சட்ட விரோதத் தன்மையை அது அகற்றி விடுகிறது. மனிதாபிமான உதவி அளிப்பது என இதைக் குறிப்பிடுவதை ஒரு வழக்கறிஞர் விரும்புவார். ஏனெனில் இது நோக்கத்தை வெளிப்படையாகக் குறிக்கிறது.

எனவே தலையீடு கோட்பாடு, ஏட்டளவில் நன்றாகத் தோன்றினாலும், செயலில் பல தவறான நோக்கங்களுக்கு வழி வகுத்துள்ளது. வழியமைத்து வருகிறது. மிக அண்மைய எடுத்துக் காட்டு கொசாவோ புலப்படுத்தியுள்ளது எனலாம்.

நன்றி : யுனெஸ்கோ கூரியர்

# இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தை கவிதை நூல் வெளியீட்டு விழா

(மைக்கல்)

கண்டி சிந்தனை வட்டம் தனது நூறாவது வெளியீடாக கிழக்கிலங்கை சாய்ந்தமருதைச் சேர்ந்த பிரபல பெண் கவிஞர் கலைமகள் ஹிதாயா ரிஸ்வி மலையகப் பெண் எழுத்தாளர் மஸீதா புன்னியாமீன் ஆகியோரின் கூட்டுப் படைப்பாக இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தை என்ற கவிதை நூலை வெளியிடுகிறது.

இந்நூலின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு கண்டி சென்நாயக்க வீதியில் உள்ள சிட்டி மிஷன் மண்டபத்தில் சட்டத்தரணி ஏ.எம்.ஜிப்ரி.கலாநிதி துரை மனோகரன்.ஆசிரியை ஆலோசகர் யு.எல்.எம். பளீ , அதிபர் எம்.கோகிலேஷ்வரி ஆகியோரின் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பேராசிரியர் எஸ்.தில்லைநாதன்(தலைவர் தமிழ் துறைபேராதனை வளாகம்) பேராசிரியர் க.அருணாசலம்(தமிழ்துறை பேராதனை வளாகம்) ஆகியோர் பிரதம அதிதிகளாகவும் கண்டி அசோக வித்தியாலயத்தின் முதல்வர் செ.நடராஜா சமாதான நீதிவானும் சட்டத்தரயியுமான ஏ.எம்.வைஸ் கவிஞர் டாக்டர் ஜின்னாசரிப்தின் பி.பி.ரி வல்லி நிலைய பணிப்பாளர் டபிள்யு.எல். ராஜரெட்ணம் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்கின்றனர்.

இவ்விழாவின் ஓர் அம்சமாக பின்வரும் கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.. பிரபல எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான டொமினிக் ஜீவா.பிரபல வானொலி அறிவிப்பாளர் திருமதி ராஜேஸ்வரி சண்முகம் தமிழ் இலக்கிய பாவலரும் சுயாதீன தொலைக்காட்சி பணிப்பாளர் சபை உறுப்பினருமான அல்லாஹ் புரவலர்ஹாசிம் உமர் பன்நூலாசிரியரும் கலாச்சார அமைச்சின் மேலதிக செயலாளருமான அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.ஜெமீல் ஆகியோர்

நூலின் முதற்பிரதியை இலக்கியக் காவலர் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்ள கவிஞர் மேமன்கவி.கவிஞர் பதியத்தலாவை பாறுக்.கவிஞர் எஸ்.எம்.எம்.ராபீக்.கவிஞர் சிபார்தீன் மரிக்காயர் ஆகியோர் கவி வாழ்த்து வழங்கவுள்ளனர்.

மேலும் இவ்நூல் வெளியீடு விழாவில் எச்.ஆர்.ஏ.ரணசிங்க லாஜா ஜென்கின்ஸ் ஒல்டின், எஸ்.ஸ்ரீவத்தன, காமினி விஜேரத்ன, ரோகித்த மானகே போன்ற கலைஞர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாகபூசணி கருப்பையா, அல்ஹாஜ் ஏ.ஆர்.எம் உவைசின் நிகழ்ச்சித் தொகுப்பில் நடைபெறும் விழாவின் இறுதியில் கவிஞர் இக்பால் அலி நன்றியுரை நிகழ்த்துவார்.

# ஆடல்பாடல் மூலம் பிள்ளைகளின் மன ஆற்றதல் வெளிப்படும்

## -பாலர் பாடசாலை விழாவில்

(ரூமி)

பாலர் பாடசாலைகளைப் பொருத்தமட்டில் பெற்றோர்கள். பிள்ளைகளுக்கு எழுத வாசிக்கத் தெரிய வேண்டும். என்று எதிர்பார்க்கக் கூடாது. பாலர் பாடசாலையானது ஆடல்கள் பாடல்கள் மூலம் அவர்களின் மன ஆற்றலை வளர்ப்பதற்குரிய நடவடிக்கையைத் தான் எடுக்கும்

இவ்வாறு, காத்தான்குடி றௌளதுல் அதுபால் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய காத்தான்குடி பிரதேச செயலாளர் எம்.சி.எம். சரீப் தெரிவித்தார்.

குசைன் சனசமூக நிலையத்தின் மூலம் நடாத்தப்பட்ட இந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிக்கு சனசமூக நிலைய தலைவர் ஏ.எல். பௌசுல் அமீன் தலைமை தாங்கினார்.

இதில் பிரதேச செயலாளர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று பெற்றெடுத்த பிள்ளைகள் மீது பெற்றோர்களும் சிறுவர் துஷ்பிரயோகத்தை மேற் கொள்கின்றனர். குழந்தை பிறந்ததுடன் தாய்மார் தாய்ப்பாலூட்ட வேண்டும். என வைத்தியர்கள் அறிவுறுத்தியும் சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவதில் அலட்சியப் போக்கை கடைப்பிடிக்கின்றார்கள். அவ்வாறு நடந்து கொள்வது தாய் பெற்றெடுத்த தன் பிள்ளை மீது தாய் செய்யும் துஷ்பிரயோகமாகும்.

அதே போல் தனது குழந்தை சுத்தமாக உள்ளதா என்பது பற்றியும் உரிய காலப் பகுதியில் தொற்று நோய்க்கான தடுப்பூஊசிகள் ஊட்டப்படுகிறதா என்பதிலும் அவதானமாக இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் இதுவும் குழந்தை மீதான துஷ்பிரயோகமாகி விடும்.

இதே போல் தொலைக் காட்சியில் கூடுதலான நேரங்களை பிள்ளைகளொடு கழித்தல், புகைத்தல் போன்ற பொருட்களை வாங்க கடைக்கு பிள்ளைகளை அனுப்புவதும் பெற்றோர்கள் பிள்ளைகள் மீது செய்யும் துஷ் பிரயோகமாகவே அமையும்

காத்தான் குடியைப் பொறுத்த மட்டில் தாய்மார்களின் கையிலேயே பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி தங்கியுள்ளது. ஆகவே தாய்மார்கள் கூடுதல் அக்கறை எடுத்து இருவகை கல்வியையும் பிள்ளை கள் பெற வழி செய்ய வேண்டும்.

அத்தோடு பாலர் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களும் பாலர்களின் ஆற்றல்களுக்கு மேலான சுமைகளைப் பிரயோகிக்க கூடாது என்றார்.

இவ்விழாவில் முன்னாள் காதி நீதிபதி எம்.ஐ.எம்.மீராசாகிப் கலந்து கொண்டார்.

# பத்ரிய்யா ஜும்ஆப்பள்ளியின் நிர்வாக சபை

(காத்தான்குடி நிருபர் அன்வர்)

அகில இலங்கை ரீதியாக பிரசித்தி பெற்று விளங்கும் காத்தான்குடி பத்ரிய்யா ஜும்ஆப்பள்ளிவாயலின் புதிய நிருவாக சபை அண்மையில் தெரிவுசெய்யப்பட்டது. அதன் விபரம் வருமாறு...

போஷகர்-மௌலவி அல்ஹாஜ் ஏ.அப்துல் றஊப(மிஸ்பாஹி)

தலைவர்-மௌலவி எச்.எம்.எம். இப்றாஹீம்(நத்வீ)

உப தலைவர்-அல்ஹாஜ் எம்.சி. ஜலால்தீன்

ஏ.எம்.ஏ. அனீஸ்(அதிபர்)

செயலாளர்-மௌலவி எம்.எம்.எம் சுப்யான்(பலாஹீ)

உப செயலாளர்-எம்.ஐ. றஹ்மத் துல்லாஹ்(பூவி)

பொருளாளர் - அல் ஹாஜ் - எம்.சி.எம்.ஹுசைன்

உப பொருளாளர்-அல்ஹாஜ் ஏ.ஆர்.எல் மஹ்மூத்லெவ்வை

கணக்காளர்-எம்.ரி.எம் ஹசன் மற்றும் 11 பேர் கொண்ட நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

# கருத்தரங்கு

(நமது நிருபர்)

'ஆண்டவர் பிறந்த மண்' என்ற சிறுகதை நூல் வெளியாகயுள்ளது.

இந்நூல் பற்றியும், பகுத்தறிவு ஆக்கப் பரப்புரை பரிசளிப்பு வைபவம் பற்றியும் கருத்தரங்கு ஒன்றை 11ம் திகதி சனிக்கிழமை மகாஜன கல்லூரியில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கை பசிமுக நிறுவனம் ஒழுங்கு செய்திருப்பதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

# செய்திச் சுருக்கம்

## பிரித்தானியாவில் சேமிப்பு:-

இலங்கை மத்திய வங்கி மேலதிகமாக தங்கத்தை கொள்வனவு செய்யும் நோக்கத்தை தற்போது கொண்டிருக்கவில்லை. தற்போது அரசாங்க கையிருப்பில் இருக்கும் இரண்டு தொன்கள் தங்கப் பாளங்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக இங்கிலாந்து நாட்டில் வைக்கப்பட்டுள்ளன.

## காங்கிரஸ் மீது குற்றச்சாட்டு :-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்த எல்ரீரீ ஈ. விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி எதுவித சிரத்தையுமின்றி மகத் தணிந்த நிலையில் கடும் போக்கை தளர்த்தி செயற்பட முற்படுவதாக ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி காங்கிரஸ் மீது குற்றம் சுமத்தியுள்ளார்

## வதிவிட அடையாள அட்டை :-

மலையகத்தில் வன் செயல்களை கட்டுப்படுத்துவதற்கான நடைமுறையாக மலையக மக்களுக்கு "வதிவிட அடையாள அட்டை" என்ற பெயரிலான அடையாள அட்டை ஒன்றை வழங்க இருப்பதாக மலையக மக்களை நாலாவது பிரஜைகளாக கும் நடவடிக்கையாகும் என்றதுடன் அவர்களின் சுயகௌரவத்தையும் பாதிப்பதாகும் என்று நுவரெலியா பா.உ எம்.சிவலிங்கம் அறிக்கை விடுத்துள்ளார்.

## தடுப்பு மருந்து இல்லை :-

நுவரெலியா ஆதார வைத்தியசாலையில் நாய்கடித் தடுப்பு மருந்துகள் இல்லாததால் இவ் வைத்தியசாலையை நாடிவரும் நாய் கடிக்கு உள்ளானவர்கள் கண்டி வைத்தியசாலைக்கே அனுப்பி வைக்கப்படுகின்றனர். கடந்த இரண்டு வாரத்துக்கு முன் நாய் கடிக்கு உட்பட்டு நூரளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரு சிறுவர்கள் உடன் தடுப்பூசி வழங்கப்படாமையால் மரணமடைந்துள்ளனர்.

## ஆற்றில் வீழ்ந்து மரணம் :-

மதுவெறியில் தடுமாறியபடி வந்த நபர் பாலத்திலிருந்து தவறி ஆற்றுக்குள் விழுந்து மண்டை சிதறி உயிரிழந்த சம்பவம் நேற்று முன் தினம் இறத்தோட்டை காலே கொளுவையைச் சேர்ந்த அதன் தெனிய பகுதியில் இடம் பெற்றுள்ளது.

## புனரமைப்பு :-

நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கலை நகரிலும் கினிகத்தேன நகரிலும் அண்மையில் தீ வைத்து சேதமாக்கப்பட்ட கடைகளைப் புதுப்பித்து இந் நகரங்களில் மீண்டும் சகல நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

## நிரந்தரத் தீர்வு

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணக்கூடிய காலகட்டத்திற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதையே நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன என்று பாராளுமன்ற குழு பிரதித் தலைவரும், கோட்டை மாநகர சபை முன்னாள் பிரதி நகரபிதாவுமான .... தெரிவித்தார்.

# எனது மருமகனை அருகிலிருந்தே சுட்டனர்

## மரண விசாரணையில் மாமனார் சாட்சியம்

(சே.பங்கயற்செல்வன்)

மோட்டார் காரை கொண்டு போய் விடச்சென்ற எனது மருமகன் கிட்டுவை வீட்டில் இருந்து எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். இரவு 8.15 மணியளவில் மோட்டார் சைக்கிள் வரும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து வீட்டுக் கேற்றை திறந்தேன். அப்போது மருமகன் மீது துப்பாக்கி வெடி விழுந்தது.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்ட திருப்பெருந்துறையைச் சேர்ந்த கிட்டு என்றழைக்கப்படும் நமசிவாயம் சிவானந்தனின் மரண விசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் மாமா முறையான அழகர்கோன் கைலாசலிங்கம் (67) என்பவர் கூறினார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையில் மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதவான் வ.வினோபா இந்திரன் மரண விசாரணையை நடத்தினார்.

அ.கைலாசலிங்கம் தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது. நான் கேற்றை திறந்தவுடன் மருமகன் கிட்டுவின் மீது துப்பாக்கி வேட்டு விழுந்தது. வெடிபட்டது அதே இடத்தில் மருமகன் கீழே விழுந்து குற்றுயிராய்க் கிடந்தார். அருகாமையில் இருந்தே இந்த துப்பாக்கி வேட்டுக்கள் வந்தன. ஆனால் எனது மருமகனை யார் சுட்டது என்று எனக்குத் தெரியாது.

இறந்தவரின் மனைவியான சிவானந்தன் ரட்ணசோதி (25) தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது.

எனது கணவருக்கு எதிராளிகள் எவரும் இல்லை. சுட்டுக் கொல்லப்பட்ட எனது கணவன் 1990 ஆண்டு ஈரோஸ் கட்சியின் உறுப்பினராக இருந்தார். ஆனால், 1990ம் ஆண்டுக்கு பிறகு எந்த இயக்கங்களுடனும் அவருக்கு தொடர்பில்லை. அதில் இருந்து சுயாதீன கார் சாரதி பயிற்றுனராக தொழில் புரிந்து வந்தார். காரை மட்டக்களப்பு புளியந்தீவில் உள்ள ஓர் வீட்டில் நிறுத்தி விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பி வருவது வழக்கம். ஆனால், சம்பவதினம் அன்று மாலை 5.30 மணியளவில் காரில் வீட்டிற்கு வந்து வயலுக்கு செலுத்தும் உரத்தை தந்து விட்டு காரை புளியந்தீவில் நிறுத்திவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பி வருவதாக கூறிச் சென்றார்.

பின்னர் சுமார் 8.30 மணியளவில் கணவர் வரும் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. அதன் பின் சில நிமிடத்தில் எனது தகப்பன் வீட்டு கேற்றைத் திறந்த வேளை பட், பட், என்று வெடிச்சத்தம் கேட்டன. அச் சத்தத்தைக் கேட்டவுடன் அதிர்ச்சி அடைந்தேன். பின்னர் சுயநினைவு திரும்பிய பின் "அப்பா, கிட்டுவை சுட்டுப் போட்டார்கள்" என்று கத்தினேன். பின்னர் அருகில் போய் பார்த்தபோது இவர் கேற்றடியில் விழுந்து கிடந்தார். உடம்பு முழுவதும் காயத்துடனும், இரத்தத்துடனும் விழுந்து கிடந்தார். அவருக்கு மேல் அவர் ஓடி வந்த மோட்டார் சைக்கிள் கிடந்தது. அந்நேரம் அவரின் நாடித்துடிப்பு வேலை செய்தது. பின்னர் செஞ்சிலுவை சங்கத்திற்கு சம்பவத்தை அறிவித்து அவர்கள் மூலம் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது நாடித்துடிப்பு இல்லை.கணவர் இறந்து விட்டார். இறந்த எனது கணவருக்கு எதிராளிகள் எவரும் இல்லை.

### கிட்டுவின் மரணம் கொலை எனத்தீர்ப்பு

சாட்சியங்களை மட்டக்களப்பு பொலிஸ் சார்ஜன் அல்பட் நெறிப்படுத்தினார்.

மேற் கூறிய சாட்சியங்களில் அடிப்படையில் இரு இனந் தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட ஆட்கொலை என பதில் நீதிவான் தீர்ப்பளித்தார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அடுத்த ஆண்டு செயற்படுத்தவிருக்கும் வீடமைப்புத் திட்டம்

(மண்முனைப்பற்று நிருபர் இ.வ.வரதராஜன்)

மட்டக்களப்பு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபையினால் எதிர் வரும் 2001ம் ஆண்டிற்கென மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலகங்களில் உள்ள 342 கிராம சேவகர் பிரிவில் நகர பிரதேசமான மட்டக்களப்பு 48 கிராம சேவகர் பிரிவு போக ஏனைய 292 கிராம சேவகர் பிரிவிற்கும் என சுமார் 1259 வீடுகள், வீட்டுப் பெருட்கள் மக்கள் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் ஜி.தவராஜா தெரிவித்துள்ளார்.

இவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில் 1259 வகையான வீட்டுத்திட்டங்களும் மூன்று பகுதியாக பகுப்பு செய்யப்படவுள்ளது. முதலாவது வகையாக பரவலான மானிய அடிப்படையிலான ஓடு வளங்கள் திட்டம். இது 357 குடும்பங்களிற்கு ஒரு குடும்பத்திற்கு தலா 10,000 (பத்தாயிரம் ரூபா). வழங்கப்படும். இரண்டாவது முறை பரவலான கடன் அடிப்படையிலானது. இக் கடன் அடிப்படை 10 வருடத்திற்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும் எனவும் இதற்கு 406 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரு குடும்பத்திற்கு 25000 ரூபாவும் வழங்கப்பட உள்ளது. மூன்றாவது பிரிவு மக்கள் எழுச்சி கிராமம் இதற்கு ஒரு குடும்பத்திற்கு 25000 (இருபத்தையாயிரம்) ரூபா செலவில் 453 குடும்பத்திற்கு வீடமைப்பு திட்டமும் செயற்படுத்தப்படவுள்ளது. இதுவும், கடன் அடிப்படையிலே ஆனவையாகும்.

மற்றுமொரு வகை வீடமைப்பான 50,000 (ஐம்பதாயிரம்) ரூபா பெறுமதியான வீடமைப்பு திட்டம் இத்திட்டம் 43 குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். வீடுகள், ஓடுகள், கூரைகள், யாவும் கட்டாயம் ஏழைகளிற்கே சென்றடைய வேண்டும் எனவும் ஏழைகளின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தவே எனது இச் சேவை உரித்துடையது எனவும் தவராஜா கூறினார்.

## நினைவாலயம் அமைக்க புதிய உலக சாதனை முயற்சி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு சுவாமி வீர மைந்தன், தேகாப்பியாசங்கள் மூலம் தான் பெற்ற சக்தியைக் கொண்டு உலக நாடுகளில் எல்லாம் பல வீர சாதனைகளை நிலைநாட்டி, நமது நாட்டுக்கும், நமக்கும், புகழ் தேடித் தந்த அமரர் இரும்பரசன் பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸ் அவர்களின் பிரதம சீடராகிய வீரதீரத்திலகம் சாண்டோ வே.ஸ்ரீதாஸ் தனது குரு நாதருக்கு நினைவாலயம் அமைப்பதற்கான நிதியைச் சேர்க்கும் பணியில் ஈடுபடவிருக்கிறார்.

இது சம்பந்தமாக எதிர் வரும் 11ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் மட்டக்களப்பு அரசினர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் புதிய உலக சாதனையை நிலைநாட்ட முன் வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## போலியோ ஒழிப்பு

(மருதமுனை வலீத்)

கொடிய போலியோ நோயை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்கும் நோக்கில் தேசிய மருந்தேற்றல் தினத்தன்று நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற் கொள்ளப்பட்ட போலியோ சொட்டு மருந்து வழங்கும் திட்டம் வெற்றியளித்துள்ளது.

3000 பிள்ளைகளுக்கு போலியோ மருந்து பூரணமாக வழங்கப்பட்டதாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.இப்திகார் தெரிவித்தார்.

## அஞ்சல் தொடர்பு சேவையாளர் சங்கம்

(நமது நிருபர்)

அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்க மட்டுநகர் கிளை தனது 42 வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தை 11ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மட்டுநகர் அஞ்சல் அலுவலக கேட்போர் கூடத்தில் நடாத்தவுள்ளது.

இந் நிகழ்வில் 41வது பொதுக் கூட்ட அறிக்கை வாசித்தல், வருடாந்த அறிக்கையும், கணக்கு அறிக்கையும் சமர்ப்பித்தல், 2000/2001 ஆண்டிற்கான உத்தியோத்தர் தெரிவு போன்றன இடம் பெறவுள்ளன.

## பரிமாற்றம்

(கல்லாறு)

அகில இலங்கை ரீதியிலான மூன்று நாள் வதிவிட வை.எம்.சி.ஏ இளைஞர்களுக்கான ஒன்று கூடல் சிலாபம் வை.எம்.சி.ஏ.யில் எதிர்வரும் வெள்ளியன்று தொடங்குகின்றது. இவ் ஒன்று கூடல் "பரிமாற்றம்" என்னும் தலைப்பின் கீழ் நடாத்தப்படுகிறது. கல்லாறு வை.எம்.சி.ஏ. சார்பில் தெரிவு செய்யப்பட்ட எட்டு இளைஞர்கள் இந்த ஒன்று கூடலில் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

## சர்வதேச மரநடுகை வாரம்

(சி.நாதன்)

எதிர் வரும் வாரம் சர்வதேச மரநடுகை வாரமாக அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

இவ்வாரத்தின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச பிரிவுகளிலும் ஒவ்வொரு மாமரம் என்ற அடிப்படையில் நடப்படவுள்ளது.

இதே போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில், 33 இடங்களில் மர நடுகை இடம் பெற உள்ளதுடன் இவ்வாரத்தையொட்டி மட்டுநகரில் உள்ள ஐந்து பாடசாலைகளில் மரநடுகை விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதற்கென 177,7.720 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மட்/ உதவி சமூர்த்தி ஆணையாளர் ஆர். நெடுஞ்செழியன் தினக்கதிருக்கு தெரிவித்தார்.

## மாலைச் சந்தை

(மருதமுனை நிருபர் எம்.ஐ.எம்.வலீத்)

மருதமுனை பொதுச்சந்தை வியாபாரிகளின் நன்மை கருதி மருதமுனை பிரதான வீதியில் பின்நேரச் சந்தை ஒன்றை அமைப்பதற்கான சகல முயற்சிகளையும் மஸ்ஜிஸ் கபீர் நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

சந்தையின் நிர்மாண வேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிர்வாக சபையின் செயலாளர்எம்.எஸ்.எம். அபுல்ஹஸன் தெரிவித்தார்.

## மாவட்ட ஆசிரியர்களுக்கான விஷேட வகுப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட வலயக் கல்விக்குட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான விஷேட பயிற்சி வகுப்புக்களை உயர்கல்வி அமைச்சு, மூன்று தினங்கள் தொடர்ந்து காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடாத்தியது.


இவ்வகுப்புக்களில் சமையற்கலை, கணணி ஆங்கிலம் போன்ற பாடங்களை வளவாளர்களாக உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வினாயகமூர்த்தி, சேவைக் கள ஆலோசகர் திருமதி தங்க வடிவேல், இணைப்பதிகாரி திருமதி பி.எம். உதுமான் சரிவ். ஆகியோர் நடாத்தினர்.

இப்பயிற்சி வகுப்புக்களுக்கு விஷேட விருந்தினராக மட்/வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். மாணிக்கராசா. மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

## குண்டு வெடிப்பினால் பனைகள் அழிப்பு

(கல்லாறு)

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில், வீதிக்கு அண்மித்ததாக உள்ள இளம் பனை மரங்கள் பல வெட்டிச் சாய்க்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக கலுதாவளை, தாளங்குடா, ஐந்தாம் கட்டை, போன்ற இடங்களிலேயே அதிகளவு பனை மரங்கள் சாய்க்கப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கிறன்றது. அண்மையில் கழுதாவளை பிரதான வீதியருகே நின்ற பனை மரத்தில் பொருத்தப்பட்டிருந்த குண்டுத் தாக்குதலில் விசேட அதிரடிப் படையினர் மயிரிழையில் தப்பியது குறிப்பிடத்தக்கது.



உலக தொடர்பு நிறுவனத்தின் கூட்டு அங்கத்துவம் பெற்ற இலங்கை ஆங்கில இசை, பேச்சுக்கான பரீட்சை நடாத்தும் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட ஆங்கில பேச்சுப் போட்டியில் ஆரம்பப் பிரிவில், பெரிய கல்லாற்றைச் சேர்ந்த க.குகதாஸ் தம்பதிகளின் புதல்வனான ரேசாலயா கலை கலாசார பொதுச்சேவை நிறுவனத்தின் எலக்கியூசவின் வகுப்பு மாணவன் துஜிப்சாந். அண்மையில் கொழும்பு பிஷப் ஹவுஸ் மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் முதற்பரிசுக்கான வெற்றிக் கிண்ணத்தை ரஜரட்ட பல்கலைக் கழக உபவேந்தர் ய.சி.ஸ்ரீவீரவிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

## வன்னியில் சமாதானத்தின் ஒளிக்கீற்று

**தற்போதைய சமாதான முயற்சியின் சந்திர கலை வளருமா? தேயுமா? என்பது பற்றிய ஓர் கண்ணோட்டத்தின் நேற்றைய தொடர்ச்சி....**

# இரத்தம் சிந்தும் தேசம் — சமாதானம் தேடுகிறது !

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சமாதானத்தை ஏற்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் முன்னெப்பொழுதுமில்லாத விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ளும் வேளையிலும் இலங்கை அரசின் மெத்தனப் போக்கு சமாதான தீர்விற்கு ஓர் கேள்விக் குறியாகவே விளங்குகிறது. இதேவேளை இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். உணவுக்கும், மருத்துவப் பொருட்களுக்கும் அமுலில் உள்ள தடைகள் அகற்றப்பட வேண்டும். மீன் பிடிப்பதற்கும். விவசாயம், போக்குவரத்து மற்றும் வர்த்தகங்களுக்குமான கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும். பாடசாலைகளிலும் வைத்தியசாலைகளிலும், வணக்கஸ்தலங்களிலும், பொதுக் கட்டடங்களிலும் இருந்து இராணுவத்தினர் அகற்றப்பட வேண்டும். நிதானமான ஓர் பகைமை நிறுத்தம் காணப்பட வேண்டும். திரு.பிரபாகரன் குறிப்பிட்ட நிபந்தனை எதனையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. எனினும் அர்த்தமுள்ள சமாதான பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதாயின் தமிழ் மக்களின் கட்டுப்பட்ட நிலைகள் வழமைக்குத் திரும்ப வேண்டும்.

**எதிர்கால சமாதானத்தின் முன்னேற்றம் இலங்கையின் ஏனைய கட்சிகளின் கையிலும் தங்கியுள்ளது.**

சமாதானத்திற்கிணங்காத பகைமை தொக்கி நிற்கின்ற நிலமையில் விடுதலைப் புலிகளின் தலைவர் விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்கிறார். தமிழ் மக்களின் இந்த தள்ளாடும் நிலையிலும் ஓர் சாதாரண நிலைமை ஏற்படும் என்று கட்டியம் கூறுவதற்கு அவர் தயங்கவில்லை. இந்த யுத்தத்தின் உக்கிரம் கொஞ்சம் கொஞ்சமாக தணிவடையும் நிலையை அடையும். இது முதலாவதாக அரசின் தோழமையான அரவணைப்பிலேயே தங்கியுள்ளது! இதன் பின்பு அரசின் ஒவ்வொரு சாதகமான செயலுக்கும் விடுதலைப்புலிகளிடம் இருந்தும் பிரதியுபகாரம் கிடைக்கும். இந்தப் பரஸ்பர செயற்பாடுகள் நம்பிக்கையை கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கு வகிக்கும். இந்த அணுகு முறை பகைமையை முடிவுக்குக் கொண்டுவரும் சந்தர்ப்பத்திலேயே இப்பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமும் வளர்சசியுமடையும்.

புலிகளின் தலைவரது கருத்துப் பரிமாற்றமானது பல வகைப்பட்ட சமாதான சாத்தியங்களையும், மாறுபட்ட சூழ்நிலையிலும் சமாதனத்தை முன்னெடுத்து செல்லக் கூடியவகையிலும் நோர்வே பிரதிநிதிகளுக்கு ஓர் திருப்திகரமான, நடைமுறை சாத்தியமான உத்வேகத்தை கொடுத்தது! இந்த கலந்துரையாடல்களின் ஆதாரம் எதிர்காலத்தில் வேறு கட்சிகளின் சமாதானம் தொடர்பான நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது.!

**சமாதானத்தின் வளர்ச்சியில் ஐ.தே.கட்சியின் பங்களிப்பு இன்றியமையாதது.**

அடுத்ததாக உள்ள முக்கிய விடயம் ஐக்கிய தேசியக் கட்சியின் சமாதானம் தொடர்பான ஒத்துழைப்பாகும். ஆனால் இது விடயமாக பிரபாகரன் அழுத்தமெதுவும் கொடுக்கவில்லை. எனினும் இது கடந்த கால அரசியலில் பின்னிப்பிணைந்த தவிர்க்கமுடியாத ஒன்றாகும் என்று கூறினார்.

சமாதான முயற்சிகளில் ஒத்துழைப்பு வழங்க/ விடுதலைப் புலிகள் நோர்வேயுடன் இணைந்து செயற்பட ஆயத்தமாக உள்ளார்கள். இவையனைத்தையும் விட இலங்கை ஜனாதிபதியுடனும் எதிர்கட்சித் தலைவருடனும் நோர்வே பிரதிநிதிகள் பேச்சு நடத்தி சாதகமான முடிவுகளை வெளியிடும் வரை இச்சமாதான முயற்சிகளின் பலன் பூரணத்துவம் பெறாது!

இது விடயமாக நோர்வே பிரதிநிதிகள் ஏமாற்றம் உள்ளவர்களாக தென்படவில்லை. இதே வேளை பிரதிநிதிகள் புலிகளும் இவ்விடயத்தில் ஊக்கத்தோடு இருப்பதை கண்டார்கள், திரு. சொல்ஹெய்ம் பத்திரிகையாளர்களின் மகாநாட்டில் "இச் சமாதான முடிவுகளைப் பெற சில கிழமைகளோ சில வருடங்களோ எடுக்கலாம். எவரும் ஓர் விரைவான பொருத்தமான முடிவை எதிர்பார்க்க முடியாது..." எனக் கூறினார். தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையின் மூலம் சமாதனத்தை அடைய ஆவலாக உள்ளார்கள் என நாங்கள் நம்புகிறோம். எனினும் அதனை எட்டுவதும் கஷ்டமாக இருக்கப்போகிறது என்பதும் எங்களுக்குத் தெரியும். இது ஓர் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடாகும். இதற்கான உடனடித் தீர்வை எவரும் விரைவாக எதிர்பார்க்க முடியாது! இம் முயற்சிகளில் உள்ள பிரச்சினைகளை நாங்கள் தெளிவாக உணர வேண்டும் என்பதனையும் திரு பிரபாகரனிடம் எடுத்துக் கூறியுள்ளோம். அத்தோடு சர்வதேச சமூகம் இலங்கையின் இறைமைக்கும், தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கும் எதுவித ஊறும் விளையாதவாறு சமாதானத்தை முன்னெடுப்பதையே தனது கருத்தில் கொண்டுள்ளது என்பதனையும் கூறினோம். இதற்கு புலிகளின் தலைவர் எதுவித கட்டுப்பாடுகளையும் கூறவில்லை. ஆகையினால் திரு பிரபாகரன் இவ்விடயத்தில் மிகவும் தீவிரப் போக்கைக் கெண்டுள்ளார்கள் என நாங்கள் நம்புகிறோம்.

**பிரபாகரனின் விட்டுக் கொடுப்பின் மதிப்பை சரியாக உணர வேண்டும்.**

ஓர் இரத்தம் சிந்தும் தேசம் சமாதானத்தைத் தேடுகிறது. வன்னிக்கான நோர்வே பிரதிநிதிகளின் விஜயம் சமாதான மறுமலர்ச்சியின் வளர்ச்சியையே கருத்திற்கொள்ள வைக்கின்றது.! இதே வேளை பிரபாகரனின் விட்டுக் கொடுப்பின் மதிப்பை சரியாக உணர்ந்து கொள்ளலும் பரஸ்பரம் விட்டுக்கொடுப்புகளை பரிமாறிக் கொள்ளலும் நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்கும். தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகளைத் தளர்த்துதல் இதற்குரிய ஓர் சத்துள்ள நடவடிக்கையாகும். இச்செயற்பாடு விடுதலைப்புலிகளுடன் சமரச முயற்சியை நீடிக்க மேலுமோர் வாய்ப்பளிக்கும் சமாதான முயற்சிகள் நிச்சயமாக போரின் உக்கிரத் தன்மையை குறைக்கும். தமிழ்மக்களின் சுதந்திரமற்ற நிலமைகள் வழமைக்குத் திரும்புவதால் தற்போதைய விரோதத்தன்மை குறைவடையும் நிலையும் தோன்றும்

ஒரு கருத்துள்ள பேச்சுவார்த்தை விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவே அதற்கான சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவர் அது விடயமாக முயற்சிகளை முன்னெடுப்பாரா? இதற்கான தீர்வு அரசின் கைகளிலேயே உள்ளது.

**தமிழில் — ரூபன்**

முற்றும்

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த சிரமதானம்

(நமது நிருபர்)

இலங்கை முழுவதும் டெங்குநோய் பரவி வருவதால் பாடசாலை மட்டத்தில் நோயைக் கட்டுப்படுத்த எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பாடசாலைகளின் எல்லைப்புற பகுதிகளை சிரமதானம் மூலம் சுத்தப்படுத்துவதற்கு ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் கல்விச் செயலாளர் மூலம் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சிரமதானத்தில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொள்வர் என்றும் ஒவ்வொரு பாடசாலைக்கும் விஷேடமாகன ஆசிரியர்கள் இதற்காகத் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் தெரிய வருகிறது.

## கருத்தரங்கு

### இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள். அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

ஆசிரியர்

# தருணத்தை தவற விடுகிறதா அரசு...?

**அரசின் சமாதானத்திற்கு தாயாரற்ற நிலையில், நோர்வே பிரதிநிதிகளின் வன்னி விஜயம் இலங்கையின் இருண்ட நிலையை நீக்க உதவும் என்பது சந்தேகத்திற்கிடமான ஒன்றாகவே இருக்கிறது.**

நோர்வேயின் சமாதானத திற்கான பூர்வாங்க வேலைகள் அந்திம நிலையை அடைந்தோ அல்லது செயற்பாடுகளின் முன்னேற்றத்தில் தேக்க நிலைமையை எதிர் நோக்கியுள்ளதோ எனக் கூறும்படியான நிலையொன்று இருந்தது. ஆனால் அவர்கள் ஓர் சமாதான முயற்சியை திரைமறைவில் தீர்க்காலோசனை செய்திருந்தார்கள். வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்து சமாதானத்திற்கான ஓர் சூழலை ஏற்படுத்தியுள்ளார்கள் எனும் செய்தி ஆச்சரியகரமானதாக இருந்தது. பண்டாரவளை, பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நடந்த படுகொலைகளின் பாதிப்புக்களையும் அதன் எதிரொலியாக மலையகத்தில் நிகழ்ந்த தமிழ்-சிங்கள கலவரங்களின் மத்தியிலும் இப் பேச்சுவார்த்தை நாட்டின் கெடுபிடி நிலைமையை தலைகீழாக மாற்றியுள்ளது. நோர்வே பிரதிநிதிகள் பிரபாகரனைச் சந்தித்த காலமானது, நாட்டின் கொந்தளிப்பு நிலமையினை தணிப்பதற்கான ஓர் தற்செயலான நடவடிக்கைக்கு சாத்தியமானதாக இருந்தது. எனினும் விடுதலைப் புலிகளோடு நோர்வே பிரதிநிதிகள் பேசியது பெரும்பான்மை சமூகத்தின் மனப்பாங்கை மாற்றவில்லை.

**இரு வருட வெற்றியை தகர்த்தெறிந்தார்கள**

கடந்த சில மாதங்களாக விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக யாழில் பெற்றுக்கொண்ட வெற்றிகளும் அவர்கள் இப் பேச்சுவார்த்தையை விரும்புவதற்கு காரணமாக இருக்கலாம். கடந்த மாதங்களில் கிடைத்த மிகப் பெரிய வெற்றிக்குப் பின் அவர்கள் தங்கள் நடிவடிக்கைகளை தாமதித்துள்ளார்கள். கடந்த பல மாதங்களாக யாழ்குடா நாட்டின் மக்கள் ஓர் விரும்பத்தகாத வற்புறுத்தலின் கீழேயே வாழ்ந்து வருகின்றனர். கடந்த வருடம் நவம்பர் மாதம் புலிகளின் வெற்றி உயர் நிலையில் இருந்தது. மிக்க் குறுகிய ஐந்து நாள் காலப் பகுதியில் இராணுவத்தின் இரண்டு வருடங்களுக்கும் மேலாக பெறப்பட்டிருந்த வெற்றியைத் தகர்த்தெரிந்தார்கள். மீண்டும் இவ்வருட ஏப்ரலில் இராணுவத்தின் மிகப் பெரிய தளமான ஆனையிறவு படைத்தளத்தைக் கைப்பற்றினர்.

இந்த வெற்றிகள் பெறப்பட்ட காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் சமாதானத்தில் அக்கறை காட்டாமல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதிலேயே குறிக்கோளாக இருந்தது. ஆனால் அவர்களது யுத்த தந்திரங்களை இடை நிறுத்தி ஓர் விலைமதிப்பில்லாத உடன்பாட்டிற்கு வர யாழுக்கு வெளியே ஓர் சூழ்நிலை உருவாகி விட்டது. இதுவும் விடுதலைப் புலிகள் சமாதானத்தின் பங்காளியாக மாற ஓர் காரணமாகும். அரசாங்கம் பிரான்ஸ் உதவி வழங்கும் குழுக் கூட்டத்தை இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் ஏற்பாடு செய்துள்ளது. இம் மகாநாடு ஏற்கனவே மூன்று தடவைகள் பிற்போடப்பட்டிருந்தது. தற்போது அரசாங்கம் இம் மாநாட்டிற்கு ஓர் தளர்ந்த நிலையிலேயே முகங் கொடுக்கப் போகிறது. அதற்கான வரைவை தயார்படுத்தப் போவதில்லை. மாறாக பொதுத்தேர்தலில் நடந்த குற்றங் குறைகளின் விமர்சனங்களையே உள்ளடக்கப் போகிறது.

**சமாதானத் திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை**

இப்போது அரசு பல பிரதிகூலமான நில்லகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது. அரசாங்கம் தற்போது விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைப் பற்றிய கருத்துக்களை தெரிவிக்க வேண்டிய இக்கட்டான நிலையிலுள்ளது.

**தமிழில் : ரூபன்**

அரசாங்கத்திடம் சொந்தமாக போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்தும் திட்டங்கள் எதுவுமில்லை. இது அரசாங்கத்தின் போரை இடை நிறுத்தி தங்களது கொள்கைகளை மீறி சமாதானத்திற்கு வரும் நிலையினை ஏற்படுத்தியது. ஆகவே இரு பக்கங்களிலும் இச் செயற்பாடு அவர்களது வளமையான நடவடிக்கைகளுக்கு தடைகளாக இருக்கின்றது.

வடகிழக்கில் தொடரும் இவ் யுத்தத்தின் மூலம் இராணுவத்தினரை அவர்களது நிலைகளில் இருந்து அகற்றும் முயற்சி வீணாகியது. அதே போல் இராணுவத்தினரும் 17 வருடங்களாக புலிகளை அழிக்க எடுத்து வரும் நடவடிக்கைகளும் வீணாகியது.

சமாதானத்திற்கான புதுச் சந்தர்ப்பம் வெற்றி இலக்கினை அடைய அரசியல் ரீதியாக புலிகளுக்கே வாய்ப்பாக உள்ளது. இந் நிலமை அரசினது கொள்கைகள் விடுதலைப் புலிகளுக்கு முரணான ஒன்றாகவே உள்ளது. புலிகளின் இக் கருத்துக்கள் நன்றாக ஆலோசித்து செய்யப்பட்ட ஒன்றாகவே உள்ளன.

(தொடரும்......)




# ஒருநாள் போட்டியில் குறைந்த ஓட்டங்களுள் ஆட்டமிழப்பு

| ஆட்டமிழந்த நாடுகள் | எதிராக விளையாடிய நாடு | ஓட்ட எண்ணிக்கை | ஓவர்கள் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. பாகிஸ்தான் | மே.இந்தியா | 43 | 19.5 | 1992 |
| 2. கனடா | இங்கிலாந்து | 45 | 40.3 | 1979 |
| 3. இந்தியா | இலங்கை | 54 | 26.3 | 2000 |
| 4. இலங்கை | மே.இந்தியா | 55 | 28.3 | 1986 |
| 5. இந்தியா | அவுஸ்திரேலியா | 63 | 25.5 | 1980 |
| 6. நியூசிலாந்து | பாகிஸ்தான் | 64 | 35.5 | 1985 |
| 7. ஸ்கொட்லாண்ட் | மே.இந்தியா | 68 | 31.3 | 1999 |
| 8. தென்னாபிரிக்கா | அவுஸ்திரேலியா | 69 | 28 | 1993 |

## பிறந்த திகதி தரும் யோகம்.

## ஜோதிடம் யூலை - 09

யூலை மாதம் 9.18.27.ம் திகதிகளில் பிறந்தவரின் பலன்கள். எண்-9. அதன் அதிபதி செவ்வாய். யூலை 9ல் பிறந்தவர்கள் புதன் ஆதிக்கமும் 18.27 ல் பிறந்தவர்கள். சந்திரனின் ஆதிக்கமும் பெற்றவர்கள்.

தைரியம் மிக்கவர்கள். சுதந்திரப்பிரியர்கள். இளமைக் காலத்தில் முன்கோபம் 'அதிகமுடையவர்கள். அதைக் கட்டுப்படுத்துவதால் பல நன்மைகளைப் பெறலாம்.

மிக விரைவாகவும், தைரியத்துடனும் செயலாற்றுபவர்கள். எந்த இடத்திலும் நிலையாக இருக்க மாட்டார்கள். திருமணமும் தாமதமாக நடை பெறுவதே நன்மை தரும்.

சேமிப்பை உங்களது குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். சிறு சேமிப்பு, ஆயுள் காப்பீடு இவற்றில் சேமிப்பதால், பிற்கால வாழ்க்கைக்குப் பயன்படும். பிற்காலத்தில் பணக்கஷ்டமும் ஏற்படாது.

வழக்கு வம்புக்களுக்கும், கோட்டிற்கும், செல்லும் இயல்புடையவர்கள். ஆனால் அதில் பண இழப்பே அதிகம் ஏற்படும். எனவே பிரச்சினைகளில் தலையிடாதிருப்பது நன்று. செல்வ நிலை ஒரே சீராக அமையாது. பல திட்டங்கள் தீட்டுவீர்கள். அதில் சில வெற்றி தரும். மறைமுக எதிர்ப்பும் இருக்கும்.

அரசு அலுவலகங்களில், உயர்ந்த பதவி, அமைச்சர்களின் காரியதரிசி, இராணுவம், போலீஸ் இலாகாவில் உயர்ந்த பணி, பொறியியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களாகத் திகழ்வார்கள். நிலங்களை வாங்கி விற்பதில் பெரும் தொகைகளை மிக எளிதாகச் சம்பாதிக்க முடியும். நல்ல உடல் நலம் பெற்றவர்கள். வியாதிகள் ஏற்பட்டாலும் விரைவில் குணமாகிவிடும். விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே பிரயாணத்தின் போதும், வாகனம் செலுத்தும் போதும் கவனம் தேவை. கண் கோளாறும் ஏற்படும். கண்ணாடி போடும் நிலையும் பிற்காலத்தில் கண் ஆபரேஷன் செய்யும் நிலையும் ஏற்படலாம். எனவே கண் பாதுகாப்பு அவசியம். 2-7-9-11-16-18-20-25-27-29ம் திகதிகளில் எந்த ஆண்டு எந்த மாதமானாலும் நன்மை தரும். உங்கள் வாழ்க்கையில் 1-9-10-18-19-27-28-36-45-46-54-55-63-64-72-73ம் வயதுகளில் பல நன்மையான பலன்கள் நடைபெறும்.

1-4-9-10-13-18-19-22-27-28-31ம் திகதிகளில் பிறந்தவர்கள் எப்பொழுதும் உதவியாகவும், நட்புறவோடும் இருப்பார்கள். வாழ்க்கைத் துணையும் இதே தேதி அமையுமானால் இணை பிரியாத் தம்பதிகளாவர்.

**வர்ணம்:** சிவப்பு, நீலம், மிகப் பொருத்தம்.

**இரத்தினம்:** பவளம் **coral** சுண்ணாம்புச் சத்து ( **caubonate of lime** ) கலந்துள்ளது.

ஒப்படர்த்தி: 2.6 கடினத்தன்மை 3 இக்கல்லினை உடலில் அணிவதால் ரத்தக் கொதிப்பு ஜீரணமின்மை, உடல் வளர்ச்சியின்மை, வேர்த்தல், ரத்தமூலம், குஷ்டம், குடல் புண், விக்கல், சுரம், சிறுநீர் கடுப்பு, மாலைக்கண், மாதவிடாய்த் தாமதம், ரத்தப்புற்றுநோய் போன்ற நோய்கள் குணமாக்கி சந்தோஷத்தையும் அதிர்ஷ்டத்தையும், தரும்.

**வே.தவராசா**

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

(மகேஸ்ரன்)



தாழங்குடா றோ.க.த.க. பாடசாலை மாணவி சுதர்ஜினி சுமலட்டா புலமைப் பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் சிவராசா தில்லியமலர் (வாவா) ஆகியோரின் புதல்வியாவார்.



இவ்வாண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மட்/ புனித சிசிலியா பெண்கள் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி. ஆன் ரூபினி பரிரான்சிஸ், 148 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.

இவர் மட்டக்களப்பு; இருதயபுரம் பிரான்சிஸ் -றூபி தம்பதியரின் ஏக புத்திரியாவார்

(தகவல் :- வெல்லாவெளி நிருபர்)



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் சனத் ஜெயசூரிய அண்மையில் சந்திரா என்ற அழகிய இளம் பெண்ணை ஆடம்பரமற்ற முறையில் திருமணம் செய்து கொண்டார். சந்திரா கொழும்பில் பிரபல்யமான தனியார் வைத்திய சாலையின் பங்காளர் ஒருவரின் மகளாவார். அண்மையில் சார்ஜாவில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கட் போட்டிக்குத் தனது கணவரான ஜயசூரியவுடன் இவர் கூடவே சென்றிருந்தார். தான் ஒரு சிறந்த கிரிக்கட் வீரன் என்பதை மனைவிக்குத் தெரியப்படுத்தவே ஜயசூரிய துடுப்பாட்டத்தில் புதிய சாதனை நிகழ்த்தினார் என்று சாஜாவில் உள்ள பிரபல பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

## வாசகர் நெஞ்சம்

### வர்ண குலசிங்கம் வீதியின் அவல நிலை.

கல்லடியில் முக்கியமான வீதிகளில் வர்ணகுலசிங்கம் வீதியும் ஒன்று. இவ் வீதியூடாக அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பிரயாணம் செய்கின்றனர். ஆனால் மழைகாலம் தொடங்கியதும், இவ் வீதியானது இடையிடையே குளமாக காட்சியளிக்கின்றது. இதனால் இவ்வீதியூடாக பிரயாணம் செய்வோர் மிகவும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி ஆவன செய்யுமாறு தயவாய் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*நலன் விரும்பி*
*கல்லடி.*

### கல்முனையில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை.

கல்முனை நகராட்சி மன்ற எல்லைப் பகுதிகளினுள் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி வர்த்தகர்கள் புகார் தெரிவிக்கின்றனர். ஒவ்வொரு நாளும் காலை வேளையில் கல்முனை மத்திய சந்தைப்பகுதியினுள் பழக்கடைகள், மரக்கறி கடைகள் போன்றவற்றில் அட்டகாசம் புரியும் கட்டாக்காலி மாடுகள் சந்தைப் பகுதிக்கு வரும் பொது மக்களுக்கும் கஸ்டங்களை ஏற்படுத்தி வருவதாகவும், தெரியவருகின்றது.

சந்தைப் பகுதியில் அலைந்து திரியும் கட்டாக்காலி மாடுகள் மாலை 6.30 மணிக்கு பின்னர் அவைகளின் உறைவிடமான கல்முனை மக்கள் வங்கி கிளைக்கு முன்னால் படுத்துறங்கி சாணம், சிறுநீர், போன்ற கழிவுப் பொருட்களால் அப்பகுதியை அசிங்கப்படுத்தி துர் நாற்றத்தினை ஏற்படுத்துவதுடன் இரவு வேளைகளில் வாகனப் போக்குவரத்திற்கும் பெரும் இடைஞ்சல்களை ஏற்படுத்தி வருவதாகவும், அப்பகுதி பொதுமக்கள் புகார் தெரிவிப்பதுடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் இது வரைக்கும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாதது குறித்து பெருங் கவலையடைவதாகவும் தெரிவித்தார்.

*ஏ.எஸ்.எம். முஸாதிக்*
*கல்முனை*

### வீதி விபத்தைத் தடுக்க வழி பண்ணுங்கள்

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட எல்லை வீதி வடக்கும், வேதாரணிய வீதியும் சந்திக்கும் முச்சந்தியில் தினமும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

கொழும்பு, பொலநறுவை நோக்கிச் செல்லும் பெரும்பாலான வாகனங்கள் இவ்வழியாகவே செல்கின்றன. இவ்வாகனங்களின் சாரதிகள் வாகனங்களை மிக வேகமாகச் செலுத்துவதனால் தான் விபத்துக்கள் உண்டாகின்றன.

இது மாத்திரமன்றி மின்சாரமும் இல்லாமல் இரவில் இருட்டுக் காடாகத் தோற்றமளிக்கிறது. அத்தோடு இவ் வீதியின் ஒரு மருங்கில் பள்ளமாக உள்ளது. மழைபெய்தால் இப்பள்ளத்தில் நீர் தேங்கி நிற்கிறது.

ஆகவே இவைகளையெல்லாம் கவனத்தில் எடுத்து உயர் அதிகாரிகள் விபத்து வருமுன் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

*சிவ - கிஸ்யந்தன்*
*புகையிரத வீதி*
*மட்டக்களப்பு.*

### படுகுழியை மூடி பாதையை சீர் செய்யவும்!

செல்வநாயகம் 2ம் குறுக்கு வீதி இருதயபுரம் கிழக்கு மெயின் வீதியைச் சென்று முடிவடையும் இடத்தில் பல வருட காலமாக இருந்து வரும் படுகுழி மழைக்காலத்தில் மட்டுமன்றி கோடை காலங்களிலும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடமாகவே உள்ளது.

இதை செப்பனிட்டுத் தருமாறு மட்டக்களப்பு ஆணையாளரிடம் பல தடவை கடிதமூலம் மன்றாட்டமாக கோரியும் இதுவரையும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த வீதியால் செல்லும் சுகாதாரப் பகுதியில் வேலை செய்யும் தாதிமார்களும், மாணவ மாணவிகளும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

ஆகவே தயவு செய்து இப்பகுதியை நிரப்பித் தரும்படி சம்பந்தப்பட்டவர்களை பணிவோடு வேண்டுகிறேன்.

*எஸ். சின்னத்தம்பி*
*இருதயபுரம் கிழக்கு*

### ஊர்வலம் பகுதிக்கு வாழ்த்து

தினக்கதிரே உன் சிறப்பைப்பற்றி பேசுவதற்கு எத்தனையோ இருக்கிறது. அதில் என் உள்ளம் கவர்ந்ததுதான் வாரம் ஓர் ஊர்வலம். ஏன் என்றால் நான் உயர்தரம் கற்கும் மாணவி. எங்கள் கல்வியோ தேடல் மூலம், கற்றலாகும். அதற்கு இந்த வாரம் ஒரு ஊர்வலம் எவ்வளவோ உதவி புரிகின்றது. ஒரு ஆக்கம் எழுதுவதென்றால அவ்வளவு எழிதல்ல. பல கஷ்டங்களையும், அனுபவிக்க வேண்டும். இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியிலும் இக்கட்டுரையை எழுதி என்னைப் போன்ற மாணவ மாணவியரையும், இப்பகுதியை விரும்பி வாசிக்கும் வாசக நெஞ்சங்களையும் வியக்க வைக்கும் இக் கட்டுரையாளன் ஐ.எல்.ஜலீல் பாராட்டப்பட வேண்டியவர். அவரின் பத்திரிகைப் பணி தொடர மென் மேலும் வாழ்த்துவதோடு தினக்கதிரையும் வாழ்த்தும் இவள்.

*ஏ.எம்.எப்.பஸ்மியா.*

# அரசில் நீரோட்டதிற்கு வந்தால் மாத்திரமே புலிகளுடன் பேச்சுவார்த்தை!

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்வார்களானால் அரசியல் அம்சங்கள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத் துவதற்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன என்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தெரிவித்தார்.**



நேற்று நான்காவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து அவர் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் இந்த நாட்டில் வாழும் சகல மக்களும் ஒன்று பட்ட நாட்டிற்குள்தான் விமோசனம் அடைய முடியும் எனவே ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் இணக்கம் தெரிவிக்க வேண்டும். இதற்காக எல்லா கதவுகளும் திறந்தேயுள்ளன.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் பேச்சு வார்த்தை நடைபெற வேண்டுமானால் அது சில நிபந்தனைகளின் பேரில் அமைய வேண்டும் என்று பேச்சுக்களை ஏற்படுத்த வந்த நோர்வே அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிபந்தனைகள் பற்றி தெரிய வந்தவுடன் சகல கட்சிகளுடனும் எல்.ரி.ரி.ஈ.யுடனும் பேச்சுக்கள் ஏற்படுத்தப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இருந்த போதிலும் யுத்தத்தின் மூலம் பதில் கொடுக்கும் திட்டம் கைவிடப்படாது என்றார். அதேவேளை தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காணுதல் என்ற கொள்கையை கோட்பாட்டை அரசாங்கம் ஒரு போதும் மாற்றிக் கொள்ளாது இந்த கொள்கைக்கு 10 தடவைகள் மக்கள் ஆணை வழங்கியுள்ளார். அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதும் பரவலாக்குவதும் சிறுபான்மை மக்களுக்கு போலவே பெரும்பான்மை மக்களுக்கும் ஜனநாயக பணியை விரிவுபடுத்துவதாகும். தீர்வு கண்டு அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போதைய தேர்தல் முறை இன்னும் பொருத்தமானதுதானா என்பதை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆராய வேண்டும்.

தற்போதைய தேர்தல் முறை வன்முறைகளுக்கு ஏதுவானதாக இருக்கின்றது எனவே அது மக்களின் விருப்பத்தை சீர்குலைத்து விடுகின்றது மக்களின் விருப்பத்தை உண்மையாக பிரதிபலிக்கும் சிறுபான்மை மக்களுக்கு நியாயம் வழங்குவதற்காகவும் தேர்தல் விதி முறை விகிதாசார பிரதிநிதித்துவ முறை ஆகிய இரண்டையும் கலந்து ஒரு புதிதான தேர்தல் முறையை உருவாக்குவதென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனநாயக உரிமைகள் புதிய அரசியல் கலாசாரம் ஆகிய வற்றை பலப்படுத்துவதற்காகவே நாட்டில் புதிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சனைகள் தோன்றியிருப்பது புதுமையல்ல ஐரோப்பிய நாடுகளில் கூட இது போன்ற பிரச்சனைகள் உள்ளன.

கடந்த ஆறு ஆண்டு களின் போது அரசாங்கம் சமர்ப்பித்த கொள்கைகள் முன்வைத்த இலக்குகளை மக்கள் அங்கிகரித்து முன்னெடுத்து செல்வதற்காக மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். இந்த வெற்றியை வழங்கியமைக்காக ஜனாதிபதி நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இனவாதம் அதி தீவிர வாதம் என்பவற்றை மக்கள் நிராகரித்திருப்பது எதிர் காலத்தில் நாட்டிற்கு நன்மை தரவல்லது எனவும் இனப்பிரச்சனைக்கு விவாதங்கள் தத்துவங்கள் மூலம் தீர்வு காண்பது சாத்தியமல்ல ஆனால் நடைமுறை தீர்வு அவசியமாகும் இன்றைய நிலைமையை கருத்தில் கொண்டு அவற்றிற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றார். பெரும்பான்மையினரின் ஒத்துழைப்பில் தான் ஜனநாயகம் தங்கியிருக்கின்றது எந்தவொரு பிரச்சனையையும் 100 வீத கருத்து ஒற்றுமையுடன் தீர்க்க முடியாது எனவே பிரச்சனை களுக்கு தீர்வு காண எல்லோரும் இணங்கும் வரை நாடு காத்திருக்க கூடாது என்று தெரிவித்தார்.

அரசாங்கம் அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை தொடர்ந்து மேற் கொள்ளவும் வடக்கிலும் கிழக்கிலும் சகல சமூகங்களையும் கொண்ட இடைக்கால சபையை அமைக்கவும் முடிவு செய்துள்ளது. நாட்டைப் பிரிக்க எவரையும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் கூறினார்.

தென் பகுதியில வன்முறையை அப்புறப்படுத்தி ஜனநாயகம் பலப்படுத்தப்பட்டுள்ளது. வடபகுதியிலும் இதேபோன்ற முறை அவசியம் எனவே பிரச்சனைக்கு தீர்வு காண பாராளுமன்றத்தில் அனைவரினதும் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

முரண்பட்ட கருத்துக்களினால் அவை பாதிக்கப்பட விடக்கூடாது இனப்பிரச்சனை ஏற்பட்டு அமைதி தொலைந்து விட்டது என்று பெரும்பான்மையான மக்கள் மனம் கலங்கியிருக்கிறார்கள் எனத்தெரிவித்தார்.

## ஜே.வி.பி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியினர் நேற்று காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பு வெலிக்கடை பொலிஸ் நிலையம் முன்பாக நடைப் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

11வது பாராளுமன்றத்தின் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமாகிய சமயத்திலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

## சேமலாப நிதி சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதி வழங்கப்படாது ஏமாற்றி வரும் தொழில் வழங்குனர் மீது துரித சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தொழில் அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தாம் உத்தரவிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் 60 சத வீதமான தொழில் வழங்குனர்கள் ஊழியர்களுக்கு சேமலாப நிதியை வழங்கா திருப்பது பற்றி தமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கையை அமைச்சர் எடுத்து ள்ளார்.

இதேவேளை தொழிலாளர்கள் பிரச்சனை தொடர்பான 12 ஆயிரம் விசாரணை கள் பூரண மடையாத நிலையில் இருப்பதாகவும் இவர் குறிப்பிட்டார். போதியளவான தொழில் நீதிமன்றங்கள் இல்லாமையே இதற்கு காரணம் என்றும் மேலதிகமாக 12 தொழில் நீதிமன்றங்களை அமைக்க உத்தேசித்திருப் பதாகவும் இது தொடர்பாக நீதியமைச்சருடன் பேச்சுவார்த்தை நடை பெறவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## நிமலனின் பூதவுடல்......

மக்கள் மலர்கள் தூவியும் மலர் மாலைகள் அணிவித்தும் கதறி அழுது கண்ணீர் அஞ்சலியை செலுதினர்.

மட்டக்களப்பில் இருந்து நேற்று மாலை 5 மணிக்கு அமரர் நிமலனின் பூதவுடல் தாங்கிய பேழை வந்தடைந்ததும் ஊறனிச் சந்தியில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் [illegible]செல்வராஜா உட்பட பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் கண்ணீர் விட்டு கதறி அழுதனர்.

பின் மட்டக்களப்பு 'கோப்பின்'சந்தியை வந்தடைந்ததும் மட்டக்களப்பு இளைஞர்கள் வாகனத்தில் இருந்த நிமலனின் பூதவுடலை தாங்கிய பேழையை தங்கள் தோள் மீது சுமந்து மட்டக்களப்பு திருமலை வீதியில் உள்ள செல்வநாயகம் மண்டபத்தை வந்தடைந்தனர்.

அங்கு பெருந் தொகையான பொது மக்கள் கூடி நின்று மறைந்த தலைவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

தற்போது மட்டக்களப்பு செல்வநாயகம் மெதடிஸ்த மண்டபத்தில் மாவட்ட மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது பூதவுடல் இன்று முற்பகல் 10 மணிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு முறக்கொட்டாஞ்சேனையில் மாலை4.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்

## கிரான்குளம் குடும்பஸ்தரின் மரணம்
# கொலை எனத் தீர்ப்பு

(சே.பங்கயற்செல்வன்)

எனது கணவர் நிலத்தில் விழுந்து கிடக்க என் சகோதரர் அங்கு ஓடி வந்தார். வந்தவரை பொல்லால் தலையில் அடித்தனர்.

எனது மகனின் நண்பன் வசந்தராஜாவுக்கும் மகனுக்கும் இடையில் ஏதோ வாய் தக்கம் ஏற்பட்டு பிரச்சனை ஏற்பட்டது. இப்பிரச்சினைப் பற்றி விசாரிப்பதற்காகவே எனது கணவர் வசந்தராஜாவின் வீட்டிற்கு சென்றார்.

அப்போது சண்டை நடக்கும் சத்தம் கேட்டு உடனே நான் அந்த இடத்திற்கு ஓடிபோனேன் அங்கு எனது கணவர் நடராஜா-ராஜேந்திரனின் தலையில் காயத்துடன் நிலத்தில் விழுந்து கிடந்தார். இதை அறிந்து இறந்தவரான எனது சகோதரர் செல்வநாயகம் இராஜேந்திரன் அங்கு ஓடிவர அவரை எனது மகனின் நண்பன் வசந்தராஜா பொல்லால் தலையில் அடித்து மரணத்தை ஏற்படுத்தினர்.

இவ்வாற கடந்த சனிக் கிழமை அடித்து கொல்லப்பட்ட கிரான்குளம் ஏழாம் வீதியை சேர்ந்த தெய்வநாயகம் இராஜேந்திரனின் (37) மரண விசாரணையின் இறந்தவரின் சகோதரி சுசிலாதேவி (38) என்பவர் கூறினார்.

இம் மரண விசாரணைளை அண்மையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் பதில் நீதவான் வி.வினோபா இந்திரன் நடத்தினார்.

சுசிலாதேவி மேலும் கூறியதாவது: எனது மகன் தவக்குமார் அவ்விடத்திற்கு வந்தார் அப்போது சிவானந்தராஜா என்பவர் வந்து என் மகனை கத்தியால் வெட்டினார் பிறகு நாங்கள் என் கணவர், சகோதரன் மகன் ஆகியோரை காத்தான்குடி வைத்திசாலையின் ஊடாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதித்தோம். அப்போது எனது சகோதரர் இறந்து விட்டார். இறந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தை. இறந்தவரின் மச்சான் முறையான நடராஜா ராஜேந்திரன் (43) தனது சாட்சியத்தில் கூறியதாவது. எனது மகனுக்கும் நண்பன் வசந்தராஜாவுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டதாம் இது பற்றி என் மனைவி என்னிடம் கூறினார். அதையடுத்து அதைப்பற்றி விசாரிப்பதற்காக வசந்தராஜாவின் வீட்டிற்கு சென்றேன் அப்போது வசந்தராஜாவின் தகப்பனிடம் 'என் மகனோடு உங்கள் மகன் ஏதோ பிரச்சனையாமே? என்று கேட்டேன் அதற்கு வசந்தராஜாவின் தகப்பன் வடிவேல் 'என்னடா கேக்கிறாய்' என்று எனக்கு தலையில் அடித்தார் அதனால் நான் மயக்கமுற்றேன் பின்னர் தலையில் காயத்துடன் என்னை மட்டக்களப்பு வைதியசாலையில் கொண்டு அனுமதித்தார்கள்

மேற்கூறிய சாட்சியங்களின் அடிப்படையில் பதில் நீதவான் மரணம் கொலை எனத் தீர்ப்பளித்ததுடன் சந்தேக நபர்களான சிவானந்தராஜா, வசந்தராஜா ஆகியோரை மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜராகும் படி கட்டளையிட்டார்.

## சிவபாதசுந்தரம்......

ரிக்கையின் முன்னாள் ஆசிரியரா[…] வார் மற்றும் லண்டன் பி.பி.சி.தமிழ் ஓசை நிகழ்ச்சிக்கு தமிழோசை எனும் பெயர் சூட்டியவர் என்ற பெருமைக்கு உரியவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில்
# 7345 மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகல் !

மட்டக்களப்பு மாவட்டத்தில் போர்,வறுமை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவு பாடசாலை மாணவர்கள் இடை நடுவிலேயே கல்வியில் இருந்து விலகி விடுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

'மட்டக்களப்பு மாவட்டத்தில் 7345 மாணவர்கள் இவ்வாண்[டு] இடைவிலகியுள்ளனர். என்[று] தெரிவிக்கப்படுகிறது.

மண்முனையில் 98[…] மாணவர்களும், மண்முனை வடக்குப்பிவில் 821 மாணவர்களும், ஆரையம்பதியில் 927 மாணவர்களும் காத்தான்குடியில் 305 மாணவர்களும் வவுணதீவில் 3664 மாணவர்களும் பட்டிப்பளையில் 1263 மாணவர்களும் பாடசாலையில் இருந்து இடைவிலகியுள்ளனர்.

இவற்றில் பட்டிப்பளை,வவுணதீவு, பகுதி அரச படைகள் காரணமாகவும் அதிகமானோர் வறுமை காரணமாகவும் பாதிக்கப்பட்டுள்ளதால் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் இடைநடுவில் விலகி உள்ளனர்.

இதேவேளை மட்டக் களப்பு மாவட்டத்தில் இடை நடுவில் விலகிய மாணவர்களில் 1993 பேர் 5 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 5352 பேர் 15 வயதுக்கு மேற்பட்டவர்களாவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

(வவுனியா நிருபர்)

## 15 ம் திகதி பரீட்சை முடிவுகள்

(கொழும்பு)

கல்வி பொதுதாராதரப் (உ-த)பத்திர பரீட்சையின் பெறு பேறுகள் இம்மாதம் 15ம் திகதியளவில் வெளியிடவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

செய்முறை பரீட்சையின் புள்ளிகள் வந்து சேர்ந்திருப்பதாகவும் குறைபாடுகள் கண்டறியப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் எதிர்வரும் டிசம்பர் மாதம் கல்விப் பொது தாராதர (சா.த) பரீட்சைப் நடைப் பெறவிருப்பதாகவும் அதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.